சிவமயம்.

தன்வந்திரி கருக்கிடை

நிகண்டு-300

சென்னை - இட்டா

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்.

சக்கரவர்த்தி பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1944 [அணா 8.

S. 240

சிவமயம்.

தன்வந்திரி கருக்கிடை

நிகண்டு - 300

சென்னை - இட்டா
பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்.
சக்கரவர்த்தி பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.
இதன் விலை] 1936 [அணா 8.

உ

கடவுள் துணை.

தன்வந்திரி பகவான் திருவாய்

மலர்ந்தருளிச்செய்த

நிகண்டு - 300

தேவஸ்துதி காப்பு

எண்சீராசிரிய விருத்தம்.

ஆயிதிரோதாயினுடைமைந்தன்கூறு அன்பாகமனோன்மணியினாதி போற்றி, வாயிதிரோ தாயென்ற மனோன்மணித்தாய் வளர்னத்தொரு வாசியுட பாதம்போற்றி, மாயிதிரோதாயினுடக் கணபதியேயென்று வாழ்த்தினேன் வல்லபையினாதிபோற்றி, ஆயிதிரோதாயினருளான சத்தி யன்பான வைரவர்தன் பாதம்போற்றி. 1

தனமான கணபதியுங் கந்தன்காப்பு தகத்தான மயேஸ்வரத் தின் பாதங்காப்பு, வனமான இருஷிகளின் பாதங்காப்பு வளர்த்தெ டுத்த என்குருவின் பாதங்காப்பு, கனமான சதாசிவத்தினருளே காப்பு, கருவாக நின்றபிண்டமூர்த்திக்காப்பு, மனமான சற்குருவின் வாசிகாப்பு, மகத்தான வழலையுட வாதிக்காப்பே. 2

காப்பென்ற ஆதிமறைவேதம்பாட, கருவான உருத்திரனு மயேஸ்வரனுஞ் சொன்னார், ஆப்பென்ற அவதரித்த பிண்டச்சோதி அன்பான வழலையுட மார்க்கப்போக்கு, வாப்பென்ற ஞானத்தின் சூக்ஷஞ்சூக்ஷம் வளமாக கற்பத்தின் குருவின்சூக்ஷம், நாப்பென்ற வைத்தியத்திற்காதிசூக்ஷம், நலமானசூக்ஷமெல்லாம் நவிலுவோமே.

* வாசியின் சூக்ஷம்.

நவிலவே வாசியுட சூக்ஷங்கேளு நலமான வாசிவதொன்பதிலே போகும், கவிலவே வாசிமூலத்தில் நின்றுக்கருவாகற பக்குமடா இன்னங்கேளு, நவிலவே யிருபத்தோ ராயிரத்தறுநூறு சுவாசம் நலமாக பறக்குதென்று சிவன் சொல்லக்கேட்டேன், அவிலவே பறந் துதான் பாழிற்போச்சு ஆனதொரு சுவாசங்க ளொடுக்கங்கேளே 4

* வாசி-குதிரை, அதே மூச்சு.

சுவாசங்களினொடுக்கம்.

கேளப்பா கம்பமது நாபிக்கம்பங் கெடியான கம்பத்தில் நவத் துவாரங்கள், பாளப்பா துவாரமது அதில்த்தானுண்டு பகாரியதுவா ரங்களடைப்புக்கேளு, ஆளப்பா அன்னமது போகுந்தொண்டை யதிலேதான் போகுதென்ற ரனுர்சொன்னுர், நானப்பாநான்கேட்டுக் கட்டிக்கொண்டேன் நலமாகவுந்தனுக்கு சொல்வேன் பாரே. 5

இரேசக—பூரக-கும்பகம்.

சொல்லவே மம்மென்று கும்பிப்பாரு சொற்பெரிய துவாரங்க ளடைத்துப்போச்சு, வல்லவே சூரியனி லிருத்திக்கும்பம் வளமாக சந்திரனில் மெள்ளவாங்கு, அல்லவே நாற்பதுநாட் பழக்கம்பண்ணு அப்பனே வாசியது வசியமாச்சு, கல்லவே யுண்றேகம் பிலத்துப் போச்சுக் கனமானவாசியது கைவசந்தானுச்சே. 6

சுப்பிரமணியர் தியானம்.

ஆச்சப்பா இல்லத்தில் குகைதான்செய்து அப்பனே யதிலி ருந்து சொல்லக்கேளு, வாச்சப்பா சுப்பிரமணியர் தியானஞ்சொல் வேன், வளமான அரீம்-கிரீம்-வகுத்துப்பாரு, மாச்சப்பா உரீம்-எரீம் ஓம்-சுப்பிரமணிய மகத்தானசுப்பிரமணியஞ் சித்தியாச்சு, காச்சப்பா ஐந்தெழுத்தும் ஆணுபெண்ணு கணமானஐங்கோணத்திடாடிடாயே.

இட்டிடவே கிழக்காக இருந்துக்கொண்டு இதமாக தியானத் தைப் பதினுறோதி, கட்டிடவே முன்சொன்ன ஊமைதன்னைக் கருத் தாக கும்பித்து பழக்கம்பண்ணும், வட்டிடவே கம்பமதிறுகிப் போச்சு வளமான நாற்பதுதான் நாளைக்குள்ளே, நிட்டிடவே துவா ரங்களடைத்துப்போச்சு நிலையான சுவாசமது வசந்தானுச்சே. 8

ஆச்சடா ஒருநாளி லிறுகும்பாரு அப்பனே நின்றபின்பு அரை யக்கேளு, வாச்சடா ஒருநாளில் நின்றுதானுல் வளமான சுவாசமது மடங்கிப்போச்சு, காச்சடா ஒருவருஷம் நின்றுயானுல் கனமான திரேகமது இறுகிப்போகும், நாச்சடா வழலைசுண்ணங் கடுகளவுக் கொள் நலமாக ஒன்றுக்கொன் றுதவியாமே. 9

ஊமை.

ஆமப்பா வப்போது தருமஞ்செய்நீ ஆனதொரு வாசியதுசித்தி யாச்சு, வாமப்பா வடமொழிபோ லொருநூலுண்டோ, வளமான வூமையனை யார்தான் சொன்னுர், காமப்பா கருகலாய் மறைத்துச் சொன்னுர் கணக்காக யான்திறந்து காட்டினேன்பார், நாமப்பா ஊமையது மகாரந்தாண்டா நலமாகளழும்புமது அகாரந்தானே. 10

தானென்ற ஆணல்லப் பெண்ணுமல்ல தனதாக மூலத்தையூன் றிப்பாரு, வானென்ற பாமாகி நின்றதப்பா வளமான தீபம்போல் நிற்கும்பாரு, மானென்ற மணிவிளக்காய் நின்றசத்தி மகத்தான ஆயிரத்தெட்டிதழுமாகி, கானென்ற இவ்விதங்களான மூலங் கணக் காக யான்திறந்து சொல்லிட்டேனே. 11

சொல்லிடவே ஆணுகும் பெண்ணுமாகுஞ் சொற்பெரியமயமா கும் விந்துவாகும், மல்லிடவே மகத்தான நாதமாகும் மருவிவருஞ் சிதம்பாமு மிதுவேயாகும், கல்லிடவே கடலாகு மலையுமாகுங் கன மான செடிகளோடு மாங்களாகும், நல்லிடவே ஆலயங்கட்கோவிலா கும் லமான சத்தசாகரங்களாகுமே. 12

ஆமெனவே யூமையிறை சனித்ததாச்சு ஆனதொருவித்தனையு மிதனுலாச்சு. வாமென்ற இம்மெனவே யட்சரந்தானையா வளர்ந்து தடா கொடிமுடி கைலாசமாச்சு, நாமெனவே சித்தருக்கு உயிராய் நின்ற நலமான ஊமைதனை சொன்னேன்பாரு, காமெனவே யென் னைப்போல் திறந்துசொல்லார் கனமான தன்வந்திரிபகவானுனே. 13

நானென்ற மூன்றுலக்ஷத் தொகுப்புச் சொன்னேன் நலமான சூக்ஷமெல்லாம் நிகண்டிற்சொன்னேன், வானென்றவாசியுட சூக்ஷ மூலம் வளமாகச்சொல்லுகிறேன் மைந்தாகேளு, மானென்றவா சியைநீ பழக்கம்பண்ணு மகத்தான வாசியைநீ மெதுவாய்க்கும்பி, கானென்ற ஒடுக்கையிலே சிதறியோடுங் கணமாக பயபக்தியாகச் செய்யே. 14

செய்பவே யான்சொல்வே னின்னமுங்கேள் செயமான வழலை யைநீ போடுபோடு, ஐயவே ஒருவருஷம் நிலையில்நின்றால் ஆனதொ ருநூற்றிரண்டு வருஷங்காக்கும், ஐபனேயந்தனித மிருந்துக்கொண்டு அன்பாக காயாதி சுண்ணங்கொள்வாய், வையவே கொண்டுவிடச் சட்டைத்தள்ளும் வளமான வச்சிரம்போல் காயமாமே. 15

காயமாம் தேகத்தை வைத்துக்கொண்டு கனமான அறுபத்து நாலுஆடு, மாயுமாம் வாசியைத்தான் நிறுத்திக்கொண்டால் மகத் தான காயத்திற் கழிவோயில்லை, மாயமாய்பூசையைச்செய் மறக்க வேண்டாம் வளமான இறக்கத்தை யெண்ணிக்கொண்டால், ஞாய மாய்ச் சொல்லிவிட்டப்படியே நின்றால் நலமான வாசியது சித்தி யாச்சே 16

* சுழியின் விவரம்.

ஆச்சப்பா இந்தவிதஞ் செய்தாயானல் அன்பான வாசியுந்து சுழியில்புக்கும், காச்சப்பாசுழியென்ன சுழியைச்சொல்வேன் கன மானஹரி-யெழுத்தின் முதலெழுத்து, வாச்சப்பா சிதம்பரத்தின்

ருக்கும் வளமான சுழிக்குள்ளே யடங்கிப்போச்சு, நாச்சப்பா நந்தி யிவ்விதமாய்ச் சொன்னார் நலமாக ஒளியாதேதிறந்திட்டேனே. 17

வாலையின் வயது.

திறந்திட்டேன் என்னைப்போல் நீயுமாவாய் திறமாகி யுன்மனதையூன்றிப்பாரு, வறந்திட்ட வாலைக்குவயதோகேளு, வளமாகபத்தாறு வயதுமாமே, அறிந்திட்ட சூரியன்போ லிருப்பாளாத்தாள் ஆனதொரு ரவிமதியும்இணையொவ்வாது, கறந்திட்ட வாலையெனும் பெண்ணைவைத்து நலமாககும்பிட்டால் பாவம்போச்சே. 18

போச்சப்பா அவளாடைக் கழற்றிக்கொண்டு புனிதமாம்வாலையெனும் பூசைசெய்வார், காச்சப்பா கள்ளுடன்சாராயம் வைப்பார் கனமான அமிர்தமென்று கொள்வாரையா, நாச்சப்பா சடுதியிலே நாசமாவார் நலமான பித்தவெறி மேலேகொண்டு, வாச்சப்பா வாமத்தில் காமஞ்செய்வார் வளமான காமத்தால் வாமம்போச்சே. 19

வாலையின் பேயர்.

போச்சடா இவையெல்லாம் வாமமல்லப் புகழான பொருளை வைத்து வாமஞ்செய்தால், ஆச்சடா ஞானமொடு யோகஞ்சித்தி, அன்பான வாதமோ டெட்டெட்டுஞ் சித்தி, வாச்சடா வாலைக்கு பேர்தான் கேளு வளமான சல்லிமரப் பாவைதாண்டா, பச்சடா பால்வார்த்து வாமஞ்செய்தால் பரிவாக சொன்னதெல்லாஞ் சித்தியாமே.

சித்தியென்ன பத்தாகுமாதமப்பா சிறப்பான சல்லிவேரென்றும்பேரு, அத்தியென்ன கொடிமூல மென்றும்பேரு ஆனதொரு கன்னிப் பெண்ணென்றும்பேரு, வத்தியேவாலைப் பெண்ணென்றும் பேரு வளமான சத்திப்பெண்ணென்றும்பேரு, சத்தியேபத்து வயதென்றும்பேரு, சமர்த்தான ஞானப்பெண்ணென்றும்பேரே. 21

பேரான அஷ்டகம்ப மெட்டும்பேரு பிளமான 0 சக்களாவென்றும்பேரு, ஆரான அஷ்டசித்தியென்றும்பேரு ஆனதொரு உருளையென்றவாலைப்பேரு, நாரணநதியென்றும் வாதமென்றும் நலமான தேவியென்றுஞ் சிவன்தானென்றும், வாரான சத்திமயமென்றும் பேரு வளமான சற்குருதானென்றும்பேரே. 22

---

* சித்தரிக்கும் சுழிக்கு மேற்கோளுதாரணம்.

அகஸ்தியர்.

சித்த்ரியாம் உட்சுழியாஞ் சிகாரமாகிதேவியுட வட்சரமே ஆ-ஊ-வாகி
மூத்தான ரீங்காரங்-கிலியு-மாகி மூன்றெழுத்தாய் வாலையாய் முடியுமாகி
பத்தாகியெட்டாகி யிரண்டுமாகி பராபரமாம் பராபரையாயருளுண்டாச்சு
சித்தரெல்லா மிந்தெழுத்தை யறியார்யாருஞ் செப்பினே னிதனுடசிங்காரந்தானே.

0 சக்களா-சகலை-அதேமாயாரூபம்

சல்லிவேரின் பெயர்.

பேரப்பா சல்லிமரமூலத்தின்பேர் பிரபலமாக விதெல்லாமாச்சு ஆரப்பா மாமப்பெண் சல்லிவேரு ஆனதொரு நந்தீசர்சல்லிவேரு, வாரப்பா சக்களாதேவிப்பெண்தான் வளமான சல்லிவேரி லொடுங் கிப்போனுள், நாரப்பா நந்தீசர் வாலைப்பெண்ணும் நலமானசல்லிவே ரொடுக்கந்தானே. 23

ஒடுக்கமடா நந்திகண்டால் வாதஞ்சித்தி ஒடுங்கயிலே யிதுவிட் டால்வாதமாமோ, வடுக்கடா வாலையை நீ விட்டாற்கால்தான் வள மான வாதமெல்லாங் கெட்டுப்போகும், நடுக்கடா மந்திரசித்திகருக் களவேணும் நலமானசல்லிவோதானும்வேணும், அடுக்கடா சல்லி வேரில்லாவிட்டால் ஆனதொரு அதரணவித்தை சித்தியாதே. 24

சித்தென்ன ஆணுமல்லப் பெண்ணுமல்லச் சிறப்பாக மங்கை பசமாகிநின்ற, அத்தனருள் சல்லிவேர்வாங்கிக்கொண்டு அப்பனே பதுமையாய்ப் பண்ணுவாய்நீ, நத்தென்று பதுமைபண்ணி பூசைப் பண்ணு நலமான வாமிசிவகாமியாவாள், நத்தென்று பத்துவயதாவ தாலே நலமானவாலைப் பெண்ணென்றும்பேரே. 25

பேரான வயதென்ன பத்தாந்திங்கள் பிரபல்லியமானதொரு கொடிதானப்பா, ஆரான ஆருந்தானறியமாட்டார் அன்பான சிவ யோகி காண்பான்பாரு, வேரான வேருமல்ல செடியுமல்ல விளங்கு கின்ற பாத்தோடே சேர்ந்ததாச்சு, சீரான என்னிகண்டியிற்றெரி யச்சொன்னேன் சிறப்பான நந்தீசா அருள்தான்பாரே. 26

கிரேதாயுகத்திற் றேரின சித்தர்களின் தொகுப்பு.

பாரப்பா யென்னைப்போ லிரக்கத்தோர்கள் பரிவாக எவருந்தா னில்லைப்பாரு, ஆரப்பா இதைகருத்தாய்ச் சொல்லிப்போட்டேன் அரன்கண்டு சபித்துவிட்டா ரவரைக்கெஞ்சி, காரப்பா வெளியாகச் சொன்னேனென்றுர் கருவாக ராசியுள்ளோன் தேர்வானென்றேன், வரப்பா கிரேதாயுகத்திற்பாரு, என்மக்களைஞ்ஞூர்பேர் தேர்ந்திட் டாரே. 27

திரேதாயுகத்திலும்-துவாபரயுகத்திலும்-கலியுகத்திலுந், தேரினசித்தர்களின்றொதிப்பு.

தேரவே திரேதாயுகத்திற்பாரு திறமாக ஆயிரம்பேர் சித்தரா ஞர், ஆரவே துவாபரயுகத்திலப்பா ஆயிரத்தி அஞ்ஞூறுபேர் அன் பாய் தேர்ந்தார், பாரப்பா கலியுகத்திற் சொலவேண்கேளு, பரிவாக மூவாயிரந்தான் தேர்வாரப்பா, சீரப்பா தேவிக்குச் சிவன்தான் சொன்னுர் சிறப்பானதேவி நந்திக்குச்சொன்னுளே. 28

சொல்லவே யான்கேட்டேன் நந்திசொன்னூர் சொற்பெரிய தன்வந்திரி சொல்வேன்பாரு, அல்லவே ஆயிரந்தான் பொன்னீந்தாலும் அப்பனே யிந்நூலை கொடுக்கவேண்டாம், வல்லவே வடமொழியை கொடுத்தாயானல் வல்வினையாய் நோயுனக்குவந்துசேரும், நலலவே நான் சொன்னேன் எளிதீதல்ல நலமாக தர்மத்தை எண்ணுவாயே.

தர்மத்தை எண்ணினவர்க் கெல்லாஞ்சித்தி தவறுதுஒருநாளுந் தர்மந்தர்மம், வர்மவானென்றூற்கால் வினைகட்சேரும் வலுவா பிணிகளெல்லாம் வந்துபோச்சு, கற்மங்கள் செய்யாமல் தர்மஞ்செய் தால்கருதிவந்த கற்மங்கள் தீரும்பாரு தர்மவானென்றூற்கால் சொல்வேன்கேளு தயவாக மறப்பெல்லாஞ் சொல்வேன்பாரே. 30

வழலையின்பேயர்.

பாரப்பா மையென்ற எழுத்தைசொன்னேன் பரிவாய்வாலை பெண்ணை திறந்துசொன்னேன். ஆரப்பா சல்லிவேர் விபாஞ்சொன்னேன் அப்பனே வழலையுடபேரைக்கேளு, வாரப்பா பிண்டமென்றும் அண்டமென்றும் வளமான ஆதியந்தமென்றும்பேரு. நாரப்பா அடியென்று முடியென்றுபேர், நலமான நாததல்லியென்றும்பேரே.

போனகுருவென்று முவருப்பென்றும், பிரபல்லியமானதொரு கம்பமென்று, மாரானவழலையென்று மூப்பூவென்று மகத்தானகொடியென்று மூலமென்று, சீரானமதியென்றும் ரோமமென்றுஞ் சொற்றுருசி சுவர்க்காரமூணுப்பென்றும் நாரான ஏரண்டம் பேரண்டமென்றும் நலமான இல்லறத்தினண்டமென்றே. 32

இல்லான சிப்பியென்றும் நத்தையென்றும் இதமானகும்பிடுகல்லென்றும்பேரு, வல்லானமேணி யானைக்கல்லென்றும் வளமான வெள்ளைக்கல்லென்றும்பேரு, மல்லானசரமாரி யுப்பென்றும் பேர் மகத்தான கேசரிதானென்றும்பேரு நல்லானவாதியுப்பென்றும்பேரு நலமான ஆதவிந்தென்றும்பேரே. 33

போரானபச்சைமலப் புளிதானென்றும் பிரபல்லிய மானதொரு நாதமென்றும் வாரானவழலைமுப்பூ வென்றும்பேரு வளமானசத்தியுப்பு சிவத்தினுப்பு, காரான காட்டுகருவென்றும்பேரு கனமான வெளிக்கருதானென்றும்பேரு, மாரான பத்மி சங்கினி தானென்று மகத்தான அத்தினி சித்தினிதானென்றே. 34

தானன கோரையென்று முடிதானென்றுந் தகத்தான லைவந்துருவ மண்டமென்று, மானன கிளிஞ்சியென்றுஞ் சிப்பியென்று மகாமகா பூவென்று மிதற்குபேரு, வானன சிற்றண்டம் பேரண்டமென்றும் வளமானநஞ்சினுட கொடிதானென்றுந், தானனகாயென்றும் பழந்தானென்றுந் தாக்கான கன்னியென்றுங் காட்டினரே. 35

காட்டினாரிரவியென்றுந் திகைபூடென்றுங் கருத்தான திகைபூச்சி யென்றுஞ்சொன்னார், நாட்டினார் காயமென்றுஞ் சிவன்விந்தென்று நலமான இந்திரகோபப்பூச்சியென்றும், வாட்டினார் சனியீசன் வாகனந்தானென்று வளமாக அஷ்டகம்பப் பாவையென்று, மாட்டினார் கருங்கோழியென்றுஞ் சொன்னார் மயமாக பேரெல்லாம் நாம்சொன்னோமே. 36

சொன்னோமே அறுபத்துநாலுபேருஞ் சொன்னதெல்லா மித்தனை மூப்பூவுக்கப்பா, அன்னோமே அறுபத்துநாலுசித்தர் அவரவர்களிச்சைபடி சாஸ்திரம் சொன்னார், வன்னோமே தலைக்காலாய்சொல்லிப்போட்டார் வளமான சித்தர்கள்தான் வகுத்தநூல்கள், மன்னோமேசித்தர்கள்தான் கூடிக்கொண்டு மகத்தான பாஷைகளால் மறைத்திட்டாரே. 37

மூளையின்பேயர்.

மறைத்திட்டார் தலைபிண்டந் தன்னையப்பா மகத்தான மூளைக்குபேர்தான்கேளு அறைத்திட்டார் சிவன்விந்து மூலைப்பாலென்றும் அன்பானபழுச்சாறென்றிதற்குபேரு, கறைத்திட்டாற்புளியென்றும் பழமலந்தானென்றுங் கனமான ஐங்காயமென்றும்பேரு, நறைத்திட்டார் விந்துவென்றுந் திகைபூடென்றும் நல்லதொரு திகைபூச்சியென்றும்பேரே. 38

பேர்சொல்ல விதற்கப்பா வேணதுண்டு போன மூளையைநீ தெளிவாய்க்காண, ஆர்சொல்லப் போரார்களென்னைப்போலே அல்லாருஞ் சொன்னவித மிதுதானப்பா, வார்சொல்லப்போனாலுந் தர்க்கஞ்செய்வார், வளமாகயான் சொன்னேன்தர்க்கஞ் செய்தார் நார்சொல்லி வாதாடி தர்க்கஞ்செய்தேன் நலமாக இந்நூலின் பொருள் சொல்லுவோமே. 39

நூலீதல்.

சொல்லவே யொன்பதிலே யறிவுதோன்றி சொற்பெரிய பதிதனிலே நல்லோர்க்கல்லால், அல்லவே தர்மவானென்று சொல்லி அப்பனே துலாராசி யோர்க்கு ஈவாய், வல்லவேயவனுந்தான் சித்தனுவான்வளமாக சித்ததிகமாகச்செய்வான், நலலவே இந்தவிதமென்றுசொன்னேன் நலமானசித்தர்கள்தான் மெச்சினாரே. 40

தலைப்பிண்ட செயநீர்.

மெய்ச்சவே தலைப்பிண்ட மண்டம்வாங்கி விருதானகல்லுறலில் போட்டுக்கொண்டு, அச்சவே அமுதமென்ற ஜலத்தைவார்த்து அப்பனே இருப்புலக்கை பதனறைசாடு, வச்சவே பன்னிரண்டு ஜாமங்

குத்து வளமாகரேகித்து மெழுகுபோலாம், கச்சவேகரண்டிகொண்டு பிங்கானிற்போட்டு கனமான ரவிதனிலே நவநாள்வைப்பே. 41

நவநாள்தான் வைக்கயிலே நீரிறங்கும்நலமான சீசாவில்பதனம் பண்ணு, அவமான அண்டமடா விந்துவிந்து, அப்பனே அண்டவிந்து தெளிவாய்ப்போச்சு, நவநாள்தான் ரண்டுவித மாச்சுதப்பா நகைபாதே செயநீரின் பெருமைகேளு, மவநாள்தான் முலைப்பாலும் பழச்சாறென்றும் மகத்தான நவநீதஜெயநீராமே. 42

ஜெயமான மூத்துநீ ரமுதமென்றுஞ் செய்தவொரு செங்கழுநீர்ச் செந்நீராச்சு, அயமானவாய்நீரும் வழலைநீரும் அப்பனே வாமநீர் காயநீராம், சயமான கன்னிநீ ரண்டநீரு கண்காண ஆணையுடவிந்தென்றும்பேர், நயமான கனியாத பழநீரென்றும் நலமானபத்மினியின் நாதமென்றே. 43

புளியின் பெயர்.

காதந்தான் பூமியுடநாதமென்று நலமான பூநீறு பழத்தினீரு, வாதந்தானிவ்விதத்தில் நிற்கும்பாரு வளமான புளியினுட பேரைக்கேளு, ஆதந்தான் பழம்புளிமலப் புளியென்றும்பேர் அகமானபஞ்சமலமெனவும்பேரு, காதந்தான் ஐங்காயமென்றும்பேரு கண்காணு வெளிகருவென்றிதற்குப்பேரே. 44

பேரான இந்நூலைப் பழித்தபேர்க்கும் பிலமான கர்மநோய்ச் சித்திக்கும்பார், ஆரான அஷ்டகுன்ம மெய்தும்பாரு ஆராலுந்தீராது அரன்மேலாணை, வேரான வேதாந்த சித்தர்சொன்ன வேதாந்தசாஸ்திரத்தின் கருமறைப்பை, நாராணஎன்போன் தட்சணையன் நலமான ஆயிரத்திருநூறென்றே. 45

என்றேதான் ஆயிரத்திருநூறப்பா இதமாக வென்பேரன் மறைத்துவைத்தான், கன்றென்ற சருக்கலைத்தான் மறைத்துவைத்தான் கனமாக இந்தவித மெடுத்துஆடு. வன்றென்ற நான்சொன்னப்படியெடுத்து வளமாக சொன்னசித்தர் சாஸ்திரவிதம், அன்றென்று அவரவர்தா னிம்முறையெடுத்து, அப்பனே நிகண்டினுடக் கருசேர்த்தாட்டே. 46

ஆட்டடா என்னைப்போற் றெண்டு செய்தோர் அப்பனே சித்தர்களிலாருமில்லை, பாட்டடா பணிவிடைக ளநேகஞ் செய்தேன் பரமான நந்தீசர்ப்பாதந்தன்னை, வாட்டடா நந்தீசராயிரந் தானீய்ந்தார் வளமான சகலகலைக்கியானமப்பா, காட்டடா அஷ்டசித்தியோகங்கண்டேன் நலமான ஞானவாதங் கண்டேனே. 47

கண்டதொரு ஞானமுடன் வாதப்போக்கு கனமானயோகமுடன் வைத்தியப்போக்கு, விண்டதொரு மாந்தரீக மயேந்திரசாலம் வெளியாக திறந்துவிட்டாராயிரத்தில், அண்டதொரு அண்டர்பிரானருளைப்போற்றி அன்பான நிகண்டிது தானடக்கம்பண்ணு தொண்டனுக்கு தொண்டனு பிருந்தானுகிற் றேனுதகருவெல்லாந் தோணுங்காணே. 48

காணப்பா கண்மணி யஸ்வனியேகேளு காணுத கருவெல்லாங் காட்டுறேன்பார், தோணப்பா தொண்டுபண்ணு நூலைவாங்கு சொற்பெரிய மோசமதாய் வாங்கவேண்டாம், ஆணப்பா நூலீய்ந்தோர் மனகொந்தாற்கால் ஆனதொரு அந்தரமாபிடிதான்வீழும், பேணப்பா அவர்மனது பூரிக்கச்செய்து பிலமான நூலைத்தான் வாங்கிக் கொள்ளே. 49

சுத்தசலத்தின் பேயர்.

கொள்ளவே சுத்தசலப் பேரைக்கேளு கொடிதான உரோமநீரென்றும்பேரு, கள்ளவே பனியினீரென்றும்பேரு கனமான எருக்கம்பாலென்றும்பேரு, விள்ளவே வைசிநீரென்றும்பேரு விதமான அப்புநீரெனறும்பேரு, அள்ளவே ஆலமடா லென்றும்பேரு அன்பான சங்குநீ ரென்றும்பேரே. 50

பேரானமதனவல்லி நீரென்றும்பேர் பிரபல்லிய மானதொரு வாசிநீரு, வாரானவாசிக்கு உயிரென்றும்பேர் வளமான வாயமூர்தமென்றும்பேரு, காரான கவபிர்ம உயிரென்றும்பேர், நீரானசுத்தசலமதற்குத்தானும் நிலையாக இத்தனைபேர் நிறைத்திட்டாரே. 51

நிறைத்திட்டார் சித்தர்கள்தான் கூடிக்கொண்டு நிலையாகபாஷைகள்தான் பேசிக்கொண்டார், விரைத்திட்டார் நூல்தோறும் பாஷையாக விபரமாயான் திறந்து நிகழ்த்திட்டேன்பார், கரைத்திட்டார் கன்னியுட குடத்தினீரை நலமான சலத்தைவிட்டாலெல்லாம் போச்சு, இறைத்திட்டாற் சுத்தசல மிதுதானப்பா இதைவிடுத்தாலொன்றுமில்லை இதமாமாரே. 52

பாரப்பாஎட்டான திங்கள்தானும் பற்றிவந்து சுத்தசலங்குடத்தில்நிற்கும், ஆரப்பா அதுதாண்டா மற்றொன்றில்லை அப்பனே அதைவிட்டால் வாதம்போச்சு, வாரப்பா வழியாக திறந்து சொன்னேன் வளமாக என்னூலைப்பழித்தாரானல், நாரப்பா நரகில்வீழ்ந் தலைவார்பாரு, நல மாக தருமபுத்திரன் சொன்னேன்பாரே. 53

நூற்-றேகை.

சொன்னானடா ஒருநிலையாய் நின்றாயானால் சொற்பெரிய சகல சித்து மிதற்குள்ளாகும், வன்னானடா இதைவிட்டால் மௌனமில்லை வளமான அமிர்தமென்ற பேருமில்லை, கன்னானடா புத்திவர என்னூல்பாரு, கனமான நிகண்டப்பா முன்னூறாகும், அன்னானடா இருநூற்றெட்டில்த்தானும் ஆனதொரு வைத்தியக் கருக்கடை சொன்னேனே. 54

சொன்னானடா எழுபத்தொன்றிலப்பா சொற்பெரிய வைத்தியந்தானப்பாபாரு, அன்னானடா அஞ்ஞூற்றில் சகலகலை சொன்னேன், அப்பனே ஆயிரத்திருநூறக்குள், வன்னானடா வாதமொடு வைத்தியமார்க்கம் வளமாக பன்னீராயிரந்தான்பாரு, மன்னானடா சகலமுந்தான் றேற்றுவிக்கும் மகத்தானமுப்பூ நாற்பதையும்பாரே

பாரப்பா ஞானமைம்பதையும்பாரு பாருலகில் முப்பதிலேமகிமைபாரு, ஆரப்பா நாடியெண்பதையும்பாரு அன்பான ஞானவெண்பாசாறும்பார், வாரப்பா என்னூலிலொன்றும் பார்த்தால் வளமாகக்கருக்களெல்லாந் தோற்றும்பாரு, நாரப்பா இவையெல்லாம் பார்த்தாயானால் நலமாக யோகவானவாய்ப்பாரே. 56

யோகமென்ற வாசியதை யறியவேண்டும் யுகம்வரைக்குஞ்சடமைது நிற்கவேண்டும், வாகமென்றவாலைப்பெண்ணை அறியவேண்டும் வளமான சல்லிவேரறியவேண்டும், நாகமென்ற ரவிமதியை அறியவேண்டும் நழமான சிவசத்திபறியவேண்டும், பூகமென்ற கைபாகமறியவேண்டும் பரிவான மந்திரந்தான் சித்திக்கவேண்டே. 57

சிவமுப்பூ.

சித்திக்க வகைகேளு சொல்வேனப்பா சிதசாத தலைப்பிண்டவோடதப்பா, வத்திக்கசாலுதான் கொண்டுவந்து வளமாக கல்லுறலிலிட்டுத்தாக்கு, அத்திக்க இருப்புலக்கை யதனாற்சாடு ஆனதொரு அண்டமெல்லாம் தூளாய்ப்போகும், நத்திக்கநாலுபலம் பூநீறாகும் நலமாக இரண்டுமொன்றாய் பாண்டத்திற்போடே. 58

போடவே பனிநீருபடிதான்வாரு பொருளான அண்டவிந்து படியரைதான்வாரு, ஆட்டவே கலக்கியதை தெளிவிருத்து அப்பனே அத்தெளிவைக் காச்சுய்க்காய்ச்சுய், வாடவே வேண்டாங்காண் காய்ச்சிக்கொண்டால் வளமான எண்ணெய்கக்கி மெழுகுபோலாம், நாடவே குழம்பாகும் எடுத்துக்கொண்டு நலமானபீங்கானில் வார்த்திடாயே. 59

வாரடா அகலமுள்ள பீங்கானில்தான் வளமாக வார்த்ததின்
மேல் பீங்கான்மூடு, ஆரடா சிவப்புமண் பூமியிற்றான் அப்பனே
நந்தவனம் வைத்துக்கொண்டு, நாரடாவதனடுவில் மேடைப்போட்டு
நலமான பீங்கானை வைத்துப்போற்று, காரடா பால்பழமுபசாரஞ்
செய்து கனமாக நாற்பத்தஞ்சுநாளே, 60

அஞ்சுநாட்சென்று சென்றால் சொல்லக்கேளு ஆரானமுப்பூ
வும் பூக்கும்பாரு, வஞ்சுகின்ற முப்பூவை யெடுத்துக்கொண்டு வள
மாக கும்பிதனில் பதனம்பண்ணு, நஞ்சிதுதான் சிவமுப்பூ பதனம்
பண்ணு நலமான முப்பூவுக்குப் பூசைப்பண்ணு, கஞ்சுகின்றநான்
சொன்ன முப்பூப்போலே கடிதான முப்பூவுஞ் சொல்லார்பாரே. 61

சத்தியின் முப்பூ பேயர்.

பாரடா சிவமுப்பூ சொன்னேனப்பா பரமானசத்தியின் முப்பூ
வைக்கேளு. ஆரடா இருநான்காம்பிண்டம்வாங்கி ஆனதொரு ஆண்
டமதை யெடுத்துக்கொண்டு, வாரடா அண்டத்தின் கோரைப்
போக்கி வளமான ஓட்டுடனே மூளைவாங்கி, நாரடா உரலிலிட்டுச்
சொல்லக்கேளு நாதாந்த உலக்கைகொண்டு சாடுசாடே. 62

சாடப்பா சாடயிலேமுன் புளியும்போடு சமர்த்தானமெழுகு
போலிரேகிக்கும்பார், வாடப்பா வழித்தெடுத்து பாண்டத்திட்டுவள
மான சுத்தசலம் படியிரண்டு, நாடப்பா செந்நீரு படிதானென்று
நலமான பாண்டத்தில் வார்த்திடாய்நீ, ஆடப்பா அடுப்பேற்றிக்கலக்
கிக்கொண்டு அப்பனே தீய்மூட்டி யெரித்திடாயே. 63

எரித்திடவே யிதிலெண்ணெய்க் கக்கிப்போகும் இதமான எண்
ணெய்க்கக்கி மஞ்சட்போலாம், வரித்திடவே நாதமென்றிதற்குப்
பேரு, வளமானபாண்டத்தை யிறக்கிக்கொண்டு, நரித்திடவே பீங்
கான்தான் அகலமாக நலமாக பீங்கானில் ஊற்றிக்கொண்டு, அரித்
திடவே முன்சொன்ன பூமிக்கேற்றி ஆனதொரு மேடையைதான்
சதுரம்பண்ணே. 64

பண்ணப்பா தும்பைசெடி சூழவைத்து பரிவாகநடுமேடை பீங்
கான்வைத்து, வண்ணப்பா அர்ச்சனைதான் தும்பைப்பூவால் வளமாக
நாற்பதுநாட் செய்துவாநீ, அண்ணப்பா மேலுமொரு பீங்கான்மூடு,
அப்பனே யிரவிரண்டாஞ் சாமம்வாங்கு, நண்ணப்பா ஒருசாமமதி
தான்வீசும் நலமாபகல்தனிலிரவி வீசுந்தானே. 65

விசுகிற கணலிலேபூக்கும்பூவு விதமான மூப்பூவு வெள்ளையையர், ஆசுகிற தென்னவென்றால் சாலைப்போலே அப்பனே கம்பியுப்பிரைச்சல்காணும், வாசுகிற தேவியுப்பு இதுதானப்பா வளமானமூப்பூவைபதனம்பண்ணு, நாசுகிறதேவியுப்பை பதனம்பண்ணு நலமான குப்பிதனிலடக்கம்பண்ணே. 66

அடக்கப்பா சிவத்துக்குச் சத்திசொன்னேன் அன்பான சிவமதுதான் விந்துவிந்து, வடக்கப்பா சத்திதான்நாதமாகும் வளமான அகாரமுடன்உகாரம்நிற்கும், நடக்கப்பா நாதமதுஉகாரந் தாண்டா நலமானவிந்துதான் அகாரமாகும், சடங்கப்பா பிரிதிவி அப்புமாகும் சமர்த்தான அப்புடனே பிரிதிவியென்றே. 67

உரோமப் பேயர்.

என்றப்பா பிரிதிவி யப்பங்கூடி இதமான மூப்பூவாம் இனிமேற்கேளு, வன்ற[illegible]பர்சிவசத்தி யுப்புச்சொன்னேன் வளமானமயிர்தனக்குப் பெயர்தான்கேளு, அன்றப்பாகோறையென்றுஞ் சவ்வென்றும் பேர், ஆனதொரு மயிர்தனக்கு சகலஞ்சொல்வார். மன்றப்பா சகலத்திற்கு மயிரைப்போக்கு மகத்தான மயிர்போக்கி யெல்லாஞ் செய்யே. 68

செய்யப்பா என்னிகண்டைச் சித்தர்க்கூடி செம்மையுடனவரிடத்தில் வைத்திருந்தார், வையப்பா வாதாடி கேள்விசொன்னேன் வளமான நிகண்டைப்பா ஈய்ந்தார்பாரு, வையப்பா உந்தனுக்கீய் வேனப்பா, மகத்தான நிகண்டிதுதான் வளஞ்சொன்னேன் பார், நையப்பா இன்னமொன்று சொல்வேன்பாரு நலமான சிவமுப்பூச் சுண்ணங்கேளே. 69

சிவமுப்பூச் சுண்ணம்.

கேளப்பா சிவனுப்பு பலந்தானுலு கிருபையாய் கல்வத்திலிட்டுக்கொண்டு, ஆளப்பா சிவநீர்து விட்டுஆட்டு அப்பனே சாமமதிரண்டுஆட்டு, வாளப்பாசுத்தசலம் சாமம்எட்டு வனமாகமயனம்தாய் ஆட்டிக்கொண்டு, நாளப்பா வழித்தெடுத்து வில்லைசெய்து நலமானச்சுக்காக உலர்த்திடாயே. 70

உலர்த்தப்பா ரவிதனிலேயுலர்த்திக்கொண்டுஉத்தமனேமுன்னீ ரூல் சீலேசெய்து, வலர்த்தப்பா வராட்டி வெட்டிற் புடத்தைப்போடு வளமாக ஆறியபின்பார்த்தாயானல், அலர்த்தப்பா வெண்முப்பூச் சுண்ணமாகும் ஆனதொரு சுண்ணமதை பதனம்பண்ணு, கலர்த்த ப்பா சுண்ணத்தைக் குப்பிதன்னில் கனமாக பதனம்பண்ணிப் பூசைப்பண்ணே. 71

முப்பூரசுண்ணப்பேயர்

பண்ணப்பா முப்பூச்சுண்ணப்பேரைக்கேளு பரிவான வழலேச் சுண்ணமென்றும்பேரு, அண்ணப்பா அண்டச்சுண்ணமென்றும் பேரு ஆனதொரு சவர்க்காரச் சுண்ணமென்றும், வண்ணப்பா விந்துச் சுண்ணமென்றும்பேரு வறுவான் பூரணத்தின் சுண்ண மென்றும், கண்ணப்பா காரச்சுண்ணமென்றும்பேரு கனமான சவர்க்காரச்சுண்ணந்தானே. 72

தானப்பா பூநீற்றுச் சுண்ணமென்றும் தயவான வெண்காரச் சுண்ணமென்றும், வானப்பா மதனவல்லிச்சுண்ணமென்றும் வளமா னபூமிநாதச்சுண்ணமென்றும், கானப்பாமதவானேச் சுண்ணமென்று கடிதான ஆனேக்கற்சுண்ணமென்றும், ஆனப்பா முப்பூநீறென்றும் பேரு, ஆனதொரு சங்குசுண்ணமென்றும்பேரே. 73

பேரப்பா முப்பூச்சுண்ணப்பேருமாகும் பிரபல்லியமானதொரு சமாதிச்சுண்ணம், வாரப்பா இவ்வாறு முப்பூச்சுண்ணம் வளமாக இத்தனேபேராச்சுதப்பா, ஆரப்பா அறிவார்கள் முப்பூச்சுண்ணம் அப்பனே யறிந்தாற்கால் சித்தன் சித்தன், காரப்பா பிரம்மனெடு விட்ணுருத்திரன் கடிதான இவர் மூவர் முப்பூவாச்சே. 74

ஆச்சப்பா இவர்மூவராலே ஐபா ஆனதொரு * சராசரங்கள் கொடுமுடிகளாச்சு, வாச்சப்பா இந்நூலே வலதழித்தால் வளமான கர்மகோயெய்தும்பாரு, நாச்சப்பா நூல்களேதான் அறியாமூடர் நல மான சாஸ்திரத்தை வெளிதென் பார்பார், காச்சப்பா காமிகளோ நூலேக்காண்பார் கனமான சிவயோகி பார்ப்பான்பாரே. 75

---

* சராசரம்-நடையுள்ளவையும்-நடையில்லாதவையும்.

சிவயோகி பார்த்தாற்கால் எல்லாஞ்சித்தி சிறப்பான மடைய ரப்பா அறியமாட்டார், அவயோகி யானாற்கால் அழிந்தேபோகும் ஆனதொரு செய்முறைகள் பலியாதப்பா, நவயோகி யாகிலுந்தான் நூல்பார்த்தாற்கால் நலமாகபார்க்கயிலே யெல்லாந் தோன்றும், மவ யோகி பார்த்தாற்கால் நூல்களோதான் மகத்தான நூல்களப்பா மயங்கும்பாரே. 76

மயங்குதடா இவன்புத்தி மயங்கிப்போகும் மகத்தான நூலப் பாகால்விதமாய்த் தோன்றும், அயங்குமடா இவன்மனதைப் பழித் தேபோடும், அவன் நினைத்தப்படிதோன்று முடியாதப்பா, வயங்கு மடா வழக்காளி நூலதாகும் வளமான நூலைத்தான் எளிதாய்ப்பார் ப்பான், நயங்குமடா நன்மைவானென்றூர்கால்தான் நலமான ஒரு மனதாய்ப் பார்ப்பான்பாரே. 77

ஒருமனதா யிருந்தாற்கால் எல்லாஞ்சித்தி உலுத்தரென்ற காமுகர்க்குச் சித்தியாமோ, வருமமாய் ஒருவரைத்தான் மோசம் பண்ணி வளமாக தன்மனுதான் பிழைக்கச் செய்தோன், அருமனந் தான் அந்திசந்தி யவர் நொந்தாற்கால் ஆனதொரு மோசத்தால்கரு மமாச்சு, கருமந்தான் கொடிதான பாவஞ்செய்துக் கனமான நூல் பார்த்தால் சித்தியாதே. 78

சித்தித்தால் நல்லோர்க்குச் சித்தியாகும் சிறப்பான தவயோ கிக்கெல்லாஞ்சித்தி. வத்தித்தால் யோகமுடன் ஞானமார்க்கம் வள மான வாதமொடு வைத்தியசித்தி, அத்தித்தாலவர்மனதா லொன்று சொன்னால் ஆனதொரு சொல்லப்பா பலிக்கும்பாரு, நத்தித்தால் தருமவானவன் தானப்பா நலமான ராசியுள்ளோன் சித்தன்தானே.

மதி ஜெய நீர்.

சித்தான மதிஜெயநீர் சொல்லக்கேளு சிதறாமல் அண்டத்தை வாங்கிக்கொண்டு, வத்தான நடுப்பாதிப் பிளந்துக்கொண்டு வளமான கம்பியுப்பு பலந்தான்போடு, மத்தான சிவசுண்ணாங் காரச்சுண்ணம் மருவிவரும் பலமதுதான் அதனிற்போடு, அத்தான் மதிதனிலே வைத்திட்டாற்கால் ஆனதொரு விந்தெல்லாம் நீராய்ப்போமே. 80

மதிசேய நீரின் பேயர்

போமப்பா இதன்பேர்தான் சொல்லக்கேளு பிரபல்லிய மானதொரு மதிசெயநீரென்றும், ஆமப்பா ரவிசெயநீ ரென்றும் பேரு ஆனதொரு ஆண்டநீரென்றும்பேரு, வாமப்பா வாலைசெயநீ ரென்றும்பேர் வளமான அண்டத்தின் விந்தென்றும்பேர், காமப்பா கன்னிநீரென்றும்பேரு, கனமான பதுமினியின் செயநீரென்றே. 81

செயமாக என்னைப்போல் சிறந்துசொல்லார் தீர்க்கமா யென் வாக்குக் கெதிரோ இல்லை, வயமான வழலைதான் பூசித்தேன்பார் வளமாக சகலசித்துஞ் சொன்னாளாத்தாள், மயமானவாலை யென்ன வயதோ கொஞ்சம் மகத்தான வாலையவள் சித்தர்தேவி. நயமான சித்தருக்குத் தாயாய்நின்றாள் நல்லதொரு வாலையைத்தான் வசியம் பண்ணே. 82

வாலை பூசை

பண்ணப்பா வாலைபூசைச் சொல்லக்கேளு பண்பாக ஓம்-கிலி யும்- சவ்வென்றேசொல், அண்ணப்பா ஐய்யும்-ரீயுமென்று அன் பான வரீயும்-நரீயுமென்றுசொல்லு, வண்ணப்பா அம்-உம்-மென்று மாட்டு வளமான வாலையுட மந்திரந்தானச்சு, நண்ணப்பா நாற்பத் தஞ்சுக்குள்ளே நலமாக லட்சத்தெட்டாயிரந்தான் போடே. 83

போடப்பா பூசைதான் சொல்லக்கேளு புகழான வடை தோசை அப்பத்தோடு, வாடப்பா பால்பழங்கள் தேங்காய் வெல் லம் வளமான வஸ்துவொடு சுற்றிவைத்து, காடப்பா தாம்பூலம் நெய்வேத்தியத்தோடு நலமான புட்பபரிமளங்கள் சாத்து, ஆடப்பா கதம்பகஸ்தூரிப் புனுகுசாத்து ஆனதொரு சாம்பிராணி வர்த்தி வையே. 84

வையப்பா வில்வம் அர்ச்சனைகட்செய்து வளமான பாவை வைத்து செய்துவாநீ, அய்யப்பா அன்னமொடு சுத்திகளும்வைத்து ஆனதொரு வாலையைத்தான் பூசைப்பண்ணு, வையப்பாமதனவல்லி வசியமாவாள் மகத்தான வாலைப்பெண் சித்தியாச்சே, நையப்பா நாகவல்லி வசியமானால் நலமான சித்தெல்லாந் தோன்றும்பாரே. 85

நஞ்சுக் கோடியின் பேயர்

யாரப்பா நஞ்சுக்கொடி பச்சையென்றும் பாங்கான உரமென்றும் அதற்குப்பேரு தாரப்பா நாடியென்றும் வீரமென்றும் தருகான பூரமென்றும் குருவண்டென்றும், வாரப்பா கல்லுப்பென்றும்பேரு வளமான பிண்டத்தில் மூத்தவண்டு, நாரப்பா வெண்சாரை யென்றுபேரு நலமான கருநெல்லி யென்றும்பாரே. 86

பேரப்பா பெற்றதொரு ரசந்தானென்றும் பேரான வெண்ணாவலென்றும்பேரு, ஆரப்பாமதியென்றும் அமுர்தமென்றும் ஆனதொரு விந்தென்று நாதமென்றும், வாரப்பா கல்லுப்பென்றும் பேரு வளமான கரியினுட உப்பென்றுஞ் சொல்வார், நாரப்பா நந்தியுப்பு வாலையுப்பென்றும் நலமாகப் பலவிதமாய் நாட்டினாரே.

நாட்டவே யானறிந்து சொல்வேனப்பா நலமான பரபிரமப் பிண்டப்பேராச்சு, வாட்டவே நந்தியென்ன பிண்டம்பிண்டம் வளமான வாலையென்ன அண்டமண்டம், காட்டவே கருவென்ன நாதம் நாதம் கருவான கருவென்ன விந்துவிந்து, மாட்டவே நாதமென்ன உகாரமாகும் மகத்தான விந்தென்ன அகாரந்தானே. 88

தானாக அண்டவிந்து அண்டநாதம் தனதாக முன்னேதான் சொல்லிவிட்டேன், வானாக யான்சொன்னார்போலேயப்பா வளமாக ஆருந்தான் சொல்லார்ச் சொல்லார்; ஆனாக ரசமதுதன் விந்து விந்து ஆனாகநஞ்சுக்கொடி பிண்டத்தோடிருக்கும், தானாக உரமதுதான் புளிதானப்பா தனதானவீரமது புளிதான்பாரே. 89

பாரடா பூரமது புளிதானப்பா பாலகனே கருவண்டு புளிதானப்பா, ஆரடா கருநாபி புளிதானென்றம் ஆனதொரு பச்சையப்பா மூளைமூளை, வாரடா மூத்தவண்டு பிண்டம்பிண்டம் வளமான வெண்சாரை விந்துவிந்து, நாரடா கருநெல்லி நாதம் நாதம் நலமான மதியமூர்தம் நாதவிந்தே. 90

அண்டச் சுண்ணம்

நாதந்தான் கல்லுப்பு அண்டமப்பா நலமான வெண்ணுவல் சத்திபுப்பு, மாதந்தான் பத்தான மாதமப்பா மகத்தான அண்ட பிண்ட மூர்த்திக்காணும், வாதந்நா னிவ்விதமாய் திறந்து சொன் னேன் வளமான அண்டத்தின் சுன்னங்கேளு, ஆதந்தான் தலைப் பிண்ட மண்டோடப்பா ஆனதொரு ஓடப்பா ரண்டெடுத்தே. 91

எடுத்தப்பா கல்லுறலி லிட்டுக்கொண்டு இதமான இரும்பு லக்கை யதனுற்சாடி, வடுத்தப்பா தூளாக்கி வடித்துக்கொண்டு வளமாகக் கல்வத்தி லிட்டுத்தாக்கு, அடுத்தப்பா சுத்தசலம் வார்த் தரைத்து அப்பனே யதன்பிறகு சொல்லக்கேளு, கடுத்தப்பா சிவச் சுன்னம் பலந்தான்போடு நலமான முன்விந்தால் சாமமாட்டே. 92

ஆட்டிடுவாய் வில்லைசெய்து ரவிபிற்போடு அப்பனே புலர்ந்த பின்பு எடுத்துக்கொண்டு, வாட்டிடுவாய் செங்நீரால் சீலைசெய்து வளமாகப் புடம்போட நீறிப்போகும், நீட்டிடுவாய் நீரெடுத்துப் பூசைப்பண்ணு நினைவாக சல்லிவேர்ப் பூசைப்பண்ணி, நாட்டிடு வாய் குப்பிதனிலடக்கஞ்செய்து நலமான சிவஅண்டச் சுண்ண மாச்சே. 93

சத்தியண்டச் சுண்ணம்

ஆக்கப்பா சிவஅண்டச் சுண்ணஞ்சொன்னேன் ஆனதொரு சத்தியண்டச் சுண்ணங்கேளு, வாச்சப்பா எட்டாவது பிண்டம் வாங்கி வளமாக அண்டத்தை வாங்கிக்கொண்டு, காச்சப்பாகோரை யுடன் மூளைப்போக்கிக் கனமான அண்டத்தைச் சுத்திக்கேளு,காச் சப்பா பூநீறுபடி தானென்று நலமான சுத்தசலம் படிதான்ரண்டே.

ரண்டப்பா இரண்டுமொன்றுய்க் கலக்கிக்கொண்டு ரேகித்து அடுப்பேற்றித் தீயைமூட்டு, வண்டப்பா தீமூட்டி யெரித்திட்டாற் கால் வளமாக சுத்தமதாய்ச் சுத்தியாச்சு, கண்டப்பா அண்டோடு எண்ணெய்க்கக்கிக் கனமாக எண்ணெயது கழன்றுபோகும், அண் டப்பா அண்டத்தை யெடுத்துக்கொண்டு அப்பனே கல்லுறலிலிட் டுச்சாடே. 95

சாடப்பா அண்டத்தைத் தூளாய்ப் பண்ணி சாஸ்திரமா மென்னுடைய கலைக்கியான விதம், ஆட்டப்பா கல்வத்திலிட்டுக் கொண்டு அப்பனே அவ்விதமுன்செய நீர்வாரு, நாட்டப்பா அரைத்து வில்லைப்பிடித்துக்கொண்டு நலமான ரவிதனில் உலரவைத்து காட்டப்பா புடம்போட்டெடுத்தாயானல் கனமான வெண்ணீருய் நீறிப்போமே. 96

நீறுமடா சுண்ணும்பாய்க் கடுங்காரச்சுண்ணம் நிலையான சத்தியண்டச் சுண்ணமாச்சு, வாருமடா அண்டச்சுண்ணஞ் சித்தரப்பா வளமாக மறைத்து வைத்தார் நான்திறந்தேன், ஆருமடா என்னைப்போல் திறந்துசொல்லார் அப்பனே தன்வந்திரி யென்பேராச்சு காருமடா கன்னிப்பெண் வயதோ பத்துக் கனமான அண்டமடா பிண்டமென்றே. 97

என்றப்பா பிண்டத்தி லண்டமாச்சு எழிலான அண்டத்திற் புளிதானுச்சு, அன்றப்பா புளியதுதான்குருவண்டாச்சு ஆனதொரு குருவண்டால் புழுகுமாச்சு, வன்றப்பா பச்சையது அண்டத்தில் தான் வளமான அவுரிபச்சை யதுதானப்பா, நன்றப்பா வாசிபுடஅமுர்தமாச்சு நலமான கண்ணேட்ட மமுர்தமாச்சே, 98

ஆச்சப்பா ஊமையனை யிழுத்துக்கொண்டு அப்பனே கண்ணேடப் பழக்கம்பண்ணல், வாச்சப்பா வாபமுர்த முருகிவீழும் வளமான சங்குநீர் தீர்த்தம்வீழும், காச்சப்பா கண்ணேட்டம் பார்த்தாயானல் கனமான மனக்கண்ணுந் தெரியலாச்சு, நாச்சப்பா நந்திக்கண் தெரிந்தபோதே நலமான சகலமுந்தான் தோற்றுந்தானே. 99

தானப்பா நல்லோர்க்குச் சித்தியாகும் தனதான சிவயோகி சித்தன்தானும், வானப்பா சித்தனைப் பிறந்தோர்க்கெல்லாம் வளமான சித்தியெல்லாந் தானேதோற்றும், ஆமப்பா சித்தனென்ற பேர்தானென்ன ஆனதொரு கன்னிபுடன் துலார்த்தோர்க்கெல்லாம் மானப்பா நூல்களைத்தான் சேர்ப்பானையா மகத்தான கன்னியது தருமனன்றே. 100

தருமந்தா னிப்பிறப்பில் செய்தோர்க்கன்றி தானகக் காட்டு மடா மறுபிறப்பில், வருமந்தான் துலாத்தினுட வண்மைக்கேளு வளமான துலாராசி உச்சமானல், நருமந்தா னல்லபதி னுபிலப்பா நலமான சித்தனென்ற பேருமாகும், கருமந்தான் காமிகளுக் கென் னவாகுங் கனமான ராசிகலைக்கியானம் பாரே. 101

பாரடா என்னுடைய கலைக்கியானத்தைப் பற்றியே பார்த் தோருக் கெல்லாந்தோன்றும், ஆரடா கலையென்ன சகலகலை தோன்றும் அப்பனே நல்லோர்க்கு கலைக்கியானம் போதும், வாரடா வழிதுரையு மிதிலேதோன்றும் வளமான சித்தெல்லாங் காணலா கும், நாரடா நந்தியொளி காணும்பாரு நலமான எட்டெட்டுமாடும் பாரே. 102

வேடியுப்பு

பாரப்பா அண்டச்சுண்ணஞ் சொன்னேன்பாரு பரிவான உப் புவகை சொல்வேன்கேளு, வாரப்பா வெடியுப்பு சொல்வேனப்பா வளமான பூநீறு படியரைதானப்பா, ஆரப்பாமுன்சொன்ன கம்பி யுப்பு அப்பனே பலமொன்று வாங்கிக்கொண்டு, நாரப்பா அமுரித னில் பூநீறிட்டு நலமாக கலக்கியதை தெளியவாங்கே, 103

வாங்கப்பா தெளியவைத்துக் காய்ச்சுக் காய்ச்சு வளயாக இறக் கியதை அஞ்சுதரக் காய்ச்சு, ஆங்கப்பா அஞ்ஜாந் தரத்திலப்பா ஆனதொரு கம்பியுப்புக் கூடச்சேரு, பாங்கப்பா பதமாக இறக்கிக் கொண்டு பாங்கான சதிரோடு தன்னிலூற்று சாங்கப்பா அஞ்சாங் காய்ச்சலுப்பாமந்த சார்வான வெடியுப்பைப் பதனம்பண்ணே. 104

கல்லுப்பு

பண்ணப்பா பூசைசெய்து பதனம்பண்ணு பார்தனிலே விள் ளாதே யிம்முப்பூதான், அண்ணப்பா வெடியுப்புச் சொன்னேனப்பா ஆனதொரு கல்லுப்பு முறைதான்கேளு, வண்ணப்பா அண்டங் குழித்தயிலம்வாங்கி வளமான பூநீறு படிதானென்று, நண்ணப்பா பாண்டத்தில் தைலம் பூநீறிட்டு நலமான வெடியுப்பு பலமொன் றிட்டே. 105

இட்டப்பா சுத்தசலம் படிதான் ரண்டு இதமான முன்செய நீர் படிதான்வாரு, வட்டப்பா கலக்கியதை யடுப்பிலேற்றிக் வளமாகக் காய்ச்சியதை யிறக்கிடாய்நீ, அட்டப்பா இந்தவிதம் எழுதாங் காய்ச்சு ஆனதொரு இக்குழம்பை ரவியில்வைநீ, நட்டப்பா தயிலமிது கல்லுப்பாச்சு நல்லாயிலங் கல்லாய்ப் பூக்கும்பாரே. 106

கல்லுப்பின் பெயர்

கல்லப்பா இக்கல்லை ஆர்தான் சொன்னார் கனமான தயிலமடா காட்டொண்ணாது, வல்லப்பா சத்தியது வெடியுப்பாச்சு வளமான சிவமதுதான் நல்லுப்பாச்சு, நல்லப்பா இத்திரண்டுங் குருதானுச்சு நலமாக இதனுடைய பேரைக்கேளு, அல்லப்பா ஆனந்தவுப் பென்றுஞ் சொல்வார் அப்பனே நந்தியுப்பு நாதியுப்பே. 107

உப்பான கல்லுப்பு பொட்டலுப்பு உத்தமனே பூநீற்றுப்பென் றேசொல்வார்' அப்பான சலவுப்பு சமுத்திர உப்பு ஆனதொரு கேசரத்துப்பென்றே சொல்வார், கப்பான கம்பியுப்புக் கந்தனுப்பு கனமான கல்லுப்பு வெடியுப் பென்றும், அப்பான பனிங்குப் புப் பாரையுப்பு அடவான காரஉப்புச் சார உப்பே. 108

வெடியுப்புக் கட்டு

சாரான பாரையுப்பு அட்டுப் பாச்சு சார்வான சத்திசிவ உப்புக்குத்தான், கூரான குருவண்டு உப்புக்குத்தான் குணமான இத்தனைப்பேர்க் கூறினார்பார், ஆரான வெடியுப்புக் கட்டுக்கேளு அப்பனே முன்விந்தால் சுருக்குசாமம், வாரான சுத்தசலம் சாமம்கண்டு வளமாகப் புளியதனாற் கவசங்கட்டே. 109

சட்டடா விந்ததனாற் சீலைசெய்து கனகமதைப் புடம்போட உருக்கிக்கட்டும், வட்டடா கட்டெடுத்துச் சொல்லக்கேளு வளமான செம்பதிலே பத்துக்கொன்று, அட்டடா ஈந்திடவே பத்தரை மாற்றாகும் அப்பனே ஈயத்திற் கொடுத்துப்பாரு, நட்டடா நாக வெள்ளி பத்தரைதானாகும் நலமான கட்டதனை பதனம்பண்ணே.

கல்லுப்புக் கட்டு

பண்ணடா கல்லுப்புக் கட்டுக்கேளு பரிந்தைங்காயம் வாய்ப் பொரத்துப்பூசி, வெண்ணடா முலைப்பளாற் சீலைசெய்து வேதாந்த

புடம்போட இருக்கிக் கட்டும், சண்ணடா செம்பைத்தா னுருக்கிக் கொண்டு சபர்த்தாக அதனிலே கடுகளவுபோடு, அண்ணடா பதினு றும் பழுத்துப்போம் அப்பனே ஈயத்திற் கொடுத்துப்பாரே. 111

வேடியுப்புச் சுண்ணம்

பாரப்பா சந்திரன்தன் உதயம் போலாம் பார்தனிலே விள் ளாதே பதனம்பண்ணு, ஆரப்பா வெடியுப்புச் சுண்ணங்கேளு அப் பனே வெடியுப்பு கல்வத்திட்டு, ஏரப்பா சிவழூபூச்சுண்ணங்கழஞ்சி போடு இதமாகமுனசெயப்ரதனுலாட்டி, வாரப்பா * வில்லைசெய்து புடத்திற்போடு வளமாக சுண்ணும்பாய் நீறிப்போமே. 112

சல்லுப்புச் சுன்னம்

போமப்பா கல்லுப்புச் சுண்ணங்கேளு புகழ்பெரிய கல்வமதில் கல்லுப்பிட்டு, ஆமப்பா சத்திமூப்பூச் சுண்ணம் விருகன் போடு அப்பனே பழச்சாற்ருல் சாமமாட்டு, வாமப்பா வழித்தெடுத்து வில் லைச்செய்து வளமாக ரவியுலர்த்திப் புடத்தைப்போடு, காமப்பா கனகமது சுண்ணும்பாய்ப்போகும் கருத்தான கற்சுண்ணம் பத னம் பண்ணே. 113

பண்ணப்பா வேதைக்கு மாட்டினுர்கால் பாங்கான சொர்னம தாய் விளையும்பாரு, அண்ணப்பா வாதவித்தைக் கோடி கோடி அப்பனே யாருதென்று செய்ய வேண்டாம், ஒண்ணப்பா யோகத் தைப் பாரு பாரு உகம் உகமாய் காயமதை நிறுத்திக்கொள்ளு, வண்ணப்பா வைத்யமொடு ஞானம்பாரு வளமாக நல்வினையைத் தேடிக்கொள்ளே. 114

வெடியுப்பு செயநீர்

கொள்ளவே என்னுடைய நூல்பார்த்தோர்க்குக் குணமாக நல்வினைகட் சேரும்பாரு, விள்ளவே யான்விண்டேன் பொருளை யப்பா விதமாக என்னைப்போல் விள்வாரில்லை, அள்ளவே வெடியுப் புச் செயநீர்கேளு அப்பனே வெடியுப்புப் பலமொன்றப்பா, கள்

---

* வில்லைசெய்து ரவியிற்-காயவைக்கவும்

ளப்பா கந்தனுப்புப் பலமொன்றப்பா கனமான முப்பூச்சுண்ணம் பலமொன்றுமே. 115

ஒன்றான பீங்கானி லிவைமூன்றிட்டு உத்தமனே மூன்செய நீர் கொஞ்சம்வாரு, வன்றான மதிதனிலே வைத்திட்டாற்கால் வள மாக ரேகித்து செயநீராகும், நன்றான செயநீரை யெடுத்துக் கொண்டு நலமான குப்பிதனில் பதனம்பண்ணு, ணன்றான வாலத னைப் பூசைப்பண்ணில் அமுர்தம்போ லிருந் தோன்றுந் தானே.

கல்லுப்பு செயநீர்

தோன்றுமடா கல்லுப்புச் செயநீர்கேளு சொற்பெரிய கல்லுப் புப் பலமொன்றப்பா, ஆண்றுமடா அண்டவிந்து பலமொன்றிட்டு அப்பனே இவைரண்டும் பீங்கானில்வைத்து, வான்றுமடா சித்தி ரைதான் ரவியில்வைக்க வளமாக செயநீரா யுருக்கிபபோகும், நான்றுமடா குப்பிதனில் பதனம்பண்ணு நாயகிபை பூசைசெய்து அடக்கம் பண்ணே. 117

குருஅண்ட செயநீர்

பண்ணடாவாதிகளே யிவைரண்டால்தான் பரிவான உப்பெல் லாஞ் செயநீராகும், நண்ணடா குருஉப்புச் செயநீராச்சு நலமான குருஅண்டச் செயநீர்கேளு, வண்ணடா சிப்பிலொன்றெடுத்துவந்து வளமான கபாலவிந்து அதனிர் போட்டு, அண்ணடா புளிசெபநீர தனில்வாரு அப்பனே சிவமூப்பூச்சுண்ணம்போடே. 118

போடப்பா கனலிலே வைத்திட்டாற்க்கால் புகழ்பெரிய செய நீராய்த் தெளிந்துநிற்கும், வாடப்பா குப்பிதனில் பதனம்பண்ணு வளமான செயநீரைப் பூசைப்பண்ணு, நாடப்பா அண்டசெய நீர் க்கு நிகரொன்டுண்டோ நலமானசெயநீர்தான் குருவுமாச்சு, காடப் பா இதனாலே செயநீர்கோடி கனமாகச் குருசெயநீர்சேர்த்துஆட்டே

ஆட்டவே இதுமூன்று பிரம்மாவிஷ்ணு ஆனதொரு ருத்திர னுமமர்ந்தார்பாரு, வாட்டவே இவர்மூவராலேயப்பா வளமாக சத்த சாகரங்களாச்சு, பாட்டவே பாகுவிட்டே னென்றெண்ணாதே பரி வானபொருளப்பா பாட்டெல்லாந்தான், காட்டவே மனுஷருக்குக் காயந்தேற நலமாக இத்தனையும் காட்டினேமே. 120

நாட்டினோ முன்னோர்கள் வாக்கியமென்று நலமாகப்பூசை செய்தால் பதவியாச்சு, நாட்டினோமிப்பிரப்பி லிராசியில்லாவிட் டால் நலம்பெறவே மறுபிறப்பிற்சித்தனாவான், காட்டினோ மிப்பிரப் பிற் சாஸ்திரம்பார்த்துக் கடிதாக தர்மத்தை யெண்ணினோர்க்கு, மாட்டினோ மருபிறப்பில் நல்வினைகளெய்து மகத்தான முற்ப்பிரப் பிரப்பின் துலாராசியோர்க்கே. 121

இராசியறியும் படி

இராசிதா னிருந்தோர்கள் சாஸ்திரம் பார்த்தால் இரவில் தான் ராஜாளி யெடுத்தார்போல, வாசிதான் கொண்டுவிடுங் கேச ரத்தில் வளமாக நல்லோர்க்கிவ் விதமாப்பாரு, நாசிதானோடா துசுழி யைக்காட்டும் நலமான ஒன்பதிலே போகாதப்பா, காசிதான் போனா லுமென்னவாகுங் கடிதான கோபத்துடன் சூதைத்தள்ளே. 122

தள்ளவே வஞ்சனையு பொய்யுமாகா தனதான விருநெஞ்சு படைக்கலாகா, வள்ளவே மோசமுடன் மாய்கையாகா வளமாக நிந் தையோடு அபாண்டமாகா, அள்ளவே கள்ளம்பொய்ச் சாக்ஷியாகா அருளுடைய குருநிந்தை யாகாதப்பா, கள்ளவே வஞ்சியுட சாப மாகா கனமான சிவசெந்தை வதைசெய்யாதே. 123

ஞானத்தின் சூட்சம்

செய்யவே பிழையெல்லாம் தள்ளினோர்க்கட் செயலான துலாத் தினாட ராசியாவார், ஐபவே ஒன்பதாம் மாசத்திற்றான் ஆனதொரு நல்வினைகள் தொல்வினைகளீவார், தையவே நல்லோர்க்கு நல்வினைக ளீவார் நலமாக பிரமனருள் நடக்கும்பாரு, நையவே இப்பிறப்பில் நல்வினைகட் செய்தால் நலமான மறுபிரப்பில் பதவியாச்சே. 124

ஆச்சப்பா நல்வினைகள் திறந்துச்சொன்னேன் அப்பனே தொல் வினைகளறிந்துச்சொன்னேன், வாச்சப்பா இவ்விதமாயிருக்காமூடர் வளமாக நூல்பார்த்தா லென்னவாகும், காட்ச்சப்பா கர்மிகட்கு சாஸ்திரமாமோ கனமான சிவயோகிக்காகும்பாரு, நாச்சப்பா சிவ யாகி யானாற்கால்தான் நலமான சாஸ்திரத்தைப் பார்த்துச்சேரே

சேரப்பா சாஸ்திரத்தை தொகையாய்ப்பாரு செம்மையுள்ள
கருக்களெல்லாம் தொகையாய்க்காணும், பாரப்பா வழிதுறையுஞ்
செவ்வைக்கண்டால் பலமான சித்தனென்ன சித்தன் சித்தன், காரா
பாசற்குருவைக் காருகாரு கனமான வழிதுறையும் காணும் காணும்
நாரப்பா நந்தியொளிற் கண்ணில்காணும் நலமான ஞானத்தின்சூட்
சம்பாரே. 126

பாரப்பா ஞானத்தின் சூட்சங்கேளு பகாறிய வழலமுறையறி
யவேண்டுங், காரப்பா கண்ணோட்டமறிய வேண்டுங் கனமான சௌ
திரியையறிய வேண்டும், வாரப்பா வாசிபைதானறிய வேண்டும் வள
மான ஊமையனையறிய வேண்டும், காரப்பா நந்தியொளி காணவேண்
டும் நாதாந்தமுப்பூவை யறியவன்றே. 127

அறியவே வாசியுட மகிமைச்சொன்னேன் ஆனதொரு ஊமை
யெழுத்ததனைச் சொன்னேன், வறியவே வாசியுட மகிமைச்சொன்
னேன் வளமான சல்லிவேரறியச் சொன்னேன், கறியவே வாதத்
தின் பொருளைச் சொன்னேன் கனமான ஞானத்தின் நுணுக்கஞ்
சொன்னேன், நறியவே நாதாக்கண் மறைப்புச்சொன்னேன் நல
மான செயநீர்கட் சொன்னேன்பாரே. 328

சொன்னனடா முப்பூவின் சூட்சம் சொன்னேன் சொற்பெ
ரியவிர்தினிட் மகிமைச் சொன்னேன், நன்னனடா நாதத்தின்மூர்த்
தஞ் சொன்னேன் நலமான குருஅண்டச் சுண்ணஞ் சொன்னேன்,
வண்ணனடா வழிதுறைகளறியச் சொன்னேன் வளமான ஞானத்
தின் தர்மஞ் சொன்னேன், கன்னனடா உப்புவைக ஜெயநீர்ச்
சொன்னேன் கனமான அண்டஜெயநீர் சொல்வேனே. 129

சொல்லவே சாஸ்திரத்தை விரித்துச்சொன்னேன் சொற்பெரி
யமூடர்கள்தானறியார்பாரு, அல்லவேயான் சொனனுற்போலே
யப்பா ஆருந்தான் சொல்லார்க ளறிந்துப்பாரு, வல்லவே சொல்லி
விட்டே வழியாயப்பா வளமான என்னூல்யார் கொடுக்கப்போரார்,
நல்லவே என்னூல்தான் உலகத்தோர்க்கு நலமான என்னூல்தான்
கிட்டாதென்றே. 130

கிட்டுமப்பா கிட்டினால் கோவைப்பாரு கிடையாத சாஸ்திரந் தான் நூல்கற்றோர்க்கு, மட்டுமப்பா மடையருக்கு கிட்டா கிட்டா மகத்தானஞானிகள்தான் நூலைகார்ப்பார், வட்டுமப்பா நூல்பார்த் தோர் உழைப்பார்பாரு வளமான ஜண்டிமாடு பார்த்தாலென்ன, நட்டுமப்பா சாவியென்ன பட்டும்பாழாம் நலமாக பொய்ச்சூது தள் ளினோர்க்கே. 131

தள்ளடா கோபமுடன் பொய்ச்சூதைத்தள்ளு தனமாகஇவை மூன்றுந் தள்ளினோர்க்கு. வள்ளடா வாதந்தான் சித்திக்கும்பார் வளமான நாற்றுறையுங் காண்பார்பாரு; நள்ளடா என்தேசம்உத்ர தேசம் நலம்பெரிய என்னுடைய கிரந்தஞ் சொன்னேன், விள்ளடா யதைபிரித்துத் தமிழாய்ச் சொன்னேன் விதமாக வென்னுடைய சாஸ்திரம்பாரே, 132

பாரப்பா என்மொழியைப் பழித்தோர்க்குத்தான் பரபிர்மன் வல்வினைக் களைய்தும்பாரு, ஆரப்பா என்மொழியைக் கண்டபேர் கள் ஆன இப்பிறப்பில் சித்தனாகாவிட்டால், வாரப்பா மறுபிறப்பில் சித்தனாவான் வளமான இறக்கத்தை யெண்ணுளண்ணு, நாரப்பா நல்லோர்க்கு மோட்சமோட்சம் நலமான * புல்லோர்க்கு நகரந் தானே. 133

கருகலி ளறியும்படி

தானப்பா நரகில்வீழ்ந் தழுவார்பாரு தனதான நல்லோர்க்கு மோட்சமோட்சம், வானப்பா வழிதுறையாய்ச் சொல்லிவிட்டேன் வளமான என்னிகண்டு இதுதானப்பா, கானற்பால்மதியமுர்தங் கொண்டபேர்கள் கனமான சாயுச்சியப் பதவியாவார், நானப்பா சொல்லிவிட்டேன் முறையாய்ச்செய்தால் நலமாக முறைபாகஞ் செய்பாகங்காணே. 134

முறையப்பா முறையாகச் சொல்லிவிட்டேன் முடியான அடி நடிவு முன்றுமாச்சு, அறையப்பா ஒன்றுமில்லை பிர்மாவிஷ்ணு ஆன தொரு உருத்திரனுமமர்ந்தார்பாரு, வறையப்பா அகாரமுடன்உகா ரம் இகாரம் வகையாக இவைமூன்று மூயிர்தானப்பா, மறையப்பா அதிமறைகள் வேதமாச்சு மகத்தான கோடிமுடியும்மூன்றுமாச்சே.

---

* புல்லோர்-தீயோர்

ஆச்சப்பா ஆதியக்தம் பனிரோச்சு அப்பனே அண்டமுடன் விந்துநாதம், காய்ச்சப்பா வஸ்துவுடன் மதுமாங்கிஷமுமாகும்கனத் ததொரு ஐம்பூதமதற்குள்ளாகும், வாச்சப்பா ஆதார மேலேசாரம் வளமான கருவிகள்தான் தொண்ணூற்ருறும், நாச்சப்பா இதிலடக் கர் தொண்ணூற்ருறும் நலமான சுத்தமொடு பரிசமாமே 136

போய்ஞ் ஞானி

ஆமப்பா கருவிகள் தானிவ்வாருகும் அப்பனே குருவென்ன கருதானுகும், பாமப்பா பாழ்ஞ்ஞானி யுலகஞானி பசப்பாக பசப்பு கிற ஞாணிக்கூற்கேள், வாமப்பா யோகமது செய்வேனென்பான் வளமான கற்குபடா மெய்ஞ்ஞானயோகி, நாமப்பா வையகத்தில் மௌனமாக நலமுடனே வாய்மூடி பசப்புவானே. 137

வானப்பா வாய்மூடி மான்பரோடே வளமாக கைக்காட்டிக் கண்ணால் மயக்குவான்பார், ஆனப்பா மனிதர்களு மதிமயங்கி ஆன தொரு கைக்குள்ளே பொருளும் ஈவார், கானற்பால் மதியமுர்தங் கொண்டேனென்பார் கனமான கள்ளுஞ் சாராயங்கொள்வார் கானப்பா யோகமது செய்தே னென்பார் நலமிலா காமபோகஞ் செய்வார்பாரே. 138

செய்யப்பா வாசிவசஞ் செய்தேனென்பார் செயமான கன்னி பெண்ணை வைத்துச்செய்வார், வையப்பா வாதமது செய்வேனென் பார் வளமாகபொன்னைவைத்து மாராட்டஞ் செய்வார், நெய்யப்பா இதுவெல்லாம் சித்தர்வேடிக்கை பார்ப்பார்நிஜமில்லா பொய்க்குருக் கள் மகிமைபாரு, ஐயப்பா இத்தேசம் விட்டுப்போவார் அப்பனே மறுதேசத்தில் மயக்குவாரே. 139

உருமாற்ற மைச்சித்தர்

வாரப்பா அவர்வயிறு பிழைக்கவேண்டி வனமாக பலவிதமா வேஷஞ்செய்வார், ஆரப்பா அவர்கள்தான் பொய்க்குருக்கள் அப் பனே மாற்றமைச் சித்தர்கேளு, காரப்பா உலகத்தி லேஙழைப் போலே நலமாக திரிவார்கள் நவிலக்கேளு, காரப்பா நிமிஷத்தில் மாற்றமையிட்டுக் கருவாக உருமாற்றித் திரிவாற்பாரே. 140

திரிந்துக்கொண்டு உலகத்தில் புதுமை பார்ப்பார் திருவான விஷ்ணுமயக் கூத்தைப்பார்ப்பார், வரைந்து கொண்டு தேசாதிதே சந்தோறும் வளமான அதிசயங்கள் காண்பார்பாரு, அறிந்துகொண்டு அவாடியைப் பூசைபண்ணி ஆனதொரு சாத்திரத்தைச் சேர்த்தேனென்று, கரிந்துகொண்டு அவர்கண்ணில் காட்டினாற்கால் கனமாகக் கைப்பாங் காட்டுவாரே. 141

காட்டாமல் சாத்திரந்தா னில்லாவிட்டால் கனமான தொழில் வற்மஞ் சொல்லார்பாரு, வாட்டாமலவர் வற்மஞ் சொல்லினாற்கால் வளமாக அவர்க்கெதிரீ யென்றெண்பார், ஆட்டாமல் கோவை சாத்திர மில்லாவிட்டால் அப்பனே சாட்சியில்லை என்றெண்பார் பாரு, தாட்டாமல் கோவைநூல் சேர்த்துக்காட்டு தனதான என்னுடைய சாஸ்திரம் பார்ப்பாரே. 142

பார்த்தாற் காலவர்மனது கனிந்துக்கொண்டு பரிவான தன்வந்திரி சாஸ்திரமென்று, கார்த்தாக்கா லுழைப்பாளி யென்றுச் சொல்லிக் கருத்தான சாஸ்திரத்தின் சாட்சிச் சொல்வார், மார்த்தான மற்றோர்க்குச் சொல்லார் சொல்லார் மகத்தான சிவயோகி தனக்குச்சொல்வார், ஆர்த்தாக்கால் கற்மிகட்குக் கண்ணில் தோற்றூர் அப்பனே நல்லோர்க்குத் தோணுவாரே. 143

வைத்திய சூட்சம் மெழுகு

தோணவே வைத்தியத்தின் சூட்சங்கேளு தொகுப்பான நரியிறைச்சி செய்யும்வாங்கி, வாணவே தலைப்பிண்டம் செய்யும்வாங்கி வளமான கருங்கோழி செய்யும்வாங்கி, காணவே அண்டமுப்பூ தானுங்கூட்டிக் கனமாக இவைநான்கும் கல்வத்திட்டு, ஆணவே நாற்சாமம் மாட்டினாற்கால் ஆனதோரு மெழுகாகும் பரணிதனில் வையே. 144

வையப்பா வாலைக்குப்பூசைப்பண்ணி வளமாக பற்பஞ் சிந்துரத்திற்கும், ஐயப்பா அதில்கடுகு கொடுத்திட்டாற்கால் அப்பனே சிந்தூரமொடு பற்பமாகும், நையப்பா நையாத சரக்கெல்லாந்தான் நன்றாக சித்திக்கு மறுபத்திநாலும், கைப்பா நவலோக மிதனால் மாளும் கனமான உப்புவகை மாண்டுபோமே. 145

வைத்திய சூக்ஷ்முப்பு

போகுமடா வைத்தியத்தின் குருதானகும் பொருளான வஸ்தோட மெழுகாமிந்த, வாகுமடா மெழுகிதுதா னகும்பாரு வளமான மெழுகிதுதான் வகுத்துப்பாரு, ஏகுமடா வைத்தியத்தின் சூக்ஷ்முப்பூ என்மகனே சொல்லுகிறே னறிந்துப்பாரு, நாகுமடா நல்லோர்க்குச் சூட்சஞ்சொன்னேன் நலமான வயித்தியரே கேட்டிடிரே 146

கேளப்பா தலைப்பிண்டங்கொண்டுவந்து கெணிதமாய் வற்றலாயுலர்த்திக்கொண்டு, வாளப்பா பூநீறு படிதானென்று வடமானபனிநீறு படிதான்ரண்டு, ஆளப்பா கலக்கியதை தெளிவைவாங்கி யப்பனே பாண்டத்தி லூற்றிக்கொண்டு, நாளப்பா அதில்பிண்டம்போட்டுக்காய்ச்சு, நலமாகாய்ச்சயி லெண்ணைக் கக்கிப்போமே. 147

போமப்பா எண்ணெய்க்கக்கி வெளிறுதட்டும் புகழான பிண்டமதைரவியுலர்த்திக, காமப்பா ரவியுலர்த்திக் கல்லுரலில் தாக்குக் கனமான உலக்கைக்கொண்டு, சாடு-சாடு, வாமப்பா சாடையிலே தூளாய்ப்போகும் வளமான தூளெடுத்தரித்துக் கொண்டு, நாமப்பா தூளெடுத்துப் பாண்டத்திட்டு நலமான சுத்தசலம் படிதான் வாரே. 148

வாரப்பா கலக்கியதை தெளியக்காய்ச்சு வளமாக் காய்ச்சயில் சுண்ணம் படரும்பாரு, ஆரப்பா அப்பத்திலிறக்கிக் கொண்டு அப்பனே துல்லியமுள்ள அகலப்பீங்கான், காரப்பா கலக்கியதைப் பீங்கானில் வார்த்துக் கனமான செம்பூமிக்கேகிக் கொண்டு, நாமப்பாநற்சதுர மேடைப்போட்டு நலமாக அதன்மீதில் வைததுப போற்றே. 149

போற்றப்பா பதினாறு நாளைக்குள்ளே பொருளான முப்பூவும் பூக்கும்பாரு, ஆற்றப்பா சித்திரையும் பங்குனியுமாகும் ஆனதொரு வைகாசி மெத்தநன்று, வாற்றப்பா ஆனியிவை நாலுமாகும் வளமான மூப்பூவும்பூக்குங்காலம் காற்றப்பா மேல்நோக்கி வீசுங்காலம் கனமான காலமிது முப்பூச்செய்யே. 150

செய்யப்பா முப்பூவை யெடுத்துக்கொண்டு செயலான குப்பி தனில் பதனம்பண்ணு, ஐயப்பா அரனை நீ தியானம்பண்ணு அப் பனே முப்பூவைப் பணிந்திடாய்நீ, வையப்பா வாமத்தின பூசைப் பண்ணி வளமான முப்பூவை யெடுத்துக்கொண்டு, கையப்பா சிந்து ரம்பற்பத்தோடு கனமான லேகியங்கள் கிருதந்தானே. 151

தானான தயிலமொடு எண்ணெய்நெய்தான் தாக்கான புடத்த யிலம் சரக்குவைப்பு, வேனான யொழுமொடு மாத்திரைதானும் வே தாந்த குழம்புகளுங் கட்டுத்தானும், ஆனாரணவைத்திய மிவை கட்கெல்லாம் அப்பனே யிக்குருவைக் கடுகளவுமாட்டு, கானனகன கமுள்ளோன் வைத்திய னென்பார் கடிதான உலகனில் சற்குரு தானுமே. 152

ஆமப்பா வயித்தியர்க்குக் குருதான்வேனும் அப்பனே குரு வைவிட்டா லெல்லாம் பொய்யாம், காமப்பா உழைத்தோருக் கெல் லாமெய்யாம் கடிதான உலகசிவ யோகிநீதான்; வாமப்பா உன்முகத் தைக் கர்மநோய் கண்டால் வளமாக கெடிகெட்டுப் பயந்தோடிப் போம், நாமப்பா முன்சொன்ன மெழுகுவேணும் நலமான முப்பூ வும் வேணும்பாரே. 153

பாரப்பா மெழுகுகொண் டறுபத்துநாலும் பரிவாகக் கொல்லு தற்கு மெழுகுவேணும், ஆரப்பா நவலோகமெல்லாமாளும் அப் பனே சஞ்சீவிமெழுகாலப்பா, வாரப்பா வயித்திய துறையுங்கா ணும் வளமான வயித்தியர்க்கு நல்வினைதானுச்சு, காரப்பா கனக சபை நடனங்காணும் கனமான சிவனுமைதியுங் காணலாச்சே 154

ஆச்சப்பா வயித்தியனே நோயாளித்தான் அப்பனே யவனை ழைக்கும் வகைதான்கேளு, வாச்சப்பா என்னுயிர்க்குதெய்வமென் பார் வளமாகநோய் தீர்ந்தால் சலிப்புத்தோன்றும், காச்சப்பா முழு திலுந்தான் தீர்ந்துபோனல் கடிதானபகையாளி வந்தானென்பார், நாச்சப்பா பகையாளிப் பணத்திற்குத்தான் நலமான பணத்தாசை யுள்ளோர்பாரே. 155

பாரப்பா அவரிடத்திற் செல்லவேண்டாம் பகாரிய தர்மத்தை யெண்ணிச்செய்நீ, ஆரப்பா அவர்தனக்கு நாகமாச்சு அப்பனே வயித்தியர்க்கு மோக்ஷமாச்சு, வாரப்பா வயித்தியனுட வித்தை யப்பா வளமான பிரமாவின் வித்தைப்பாரு, நாரப்பா நாஜன்மம் பிறந்தாலென்ன நல்ராசியுளோன் பிறக்கவேணுந்தானே. 156

வேணுமென்ன சகலகலைகற்கவேணும் வேதாந்த சாஸ்திரத்தை யறியவேணும், ஆணுமென்ன பிறக்கிறது நல்லோரப்பா அதிலுந் தான் கூன்குருடு முடவனுகா, காணுமென்ன இவைதள்ளிப் பிறந் தோருக்குக் கனமான நல்லோராய்ப் பிறப்பாரையா. நானுமெ ன்ன இவைதள்ளிப் பிறந்தோருக்கு நலமான சாயுச்சியப் பதவிதானே. 157

தானுன ஆணவத்தால் கெட்டுப்போவார் தனதான புத்தியுள் ளோர் தேர்வார்பாரு, மானுன மாய்கையினுல் மதத்தால் தானும் மகத்தான தினைகளடர்ந்துப் போச்சு, வேனுன வேதாந்த சாஸ் திரம் பார்த்தாலும் வீனப்பா தேரார்கள் வீணர் வீணர், கானுன அவர் பிறந்த ஜன்மக்கூறு கழுதையடா அவர் பிறப்பு மட்டிமாடே. 158

மாட்டப்பா அவனுக்கு சாஸ்திரமென்ன மகத்தான சிவயோகி புத்தியுள்ளோன், ஆடப்பா புத்திமான் சாஸ்திரம் பார்த்தால் அப் பனே யட்சிணத்தில் தேர்வான்பாரு, வாடப்பா வாசியைத்தான் புத்தியாலே வளமாகக் கூடினவன் புத்தியுள்ளோன், நாடப்பா சிவயோகிக் கூட்டிக்கொள்வான் நலமான வாசியா லெல்லாமாச்சே.

ஆச்சப்பா எல்லாந்தான் கற்றுலென்ண அப்பனே சாக கல்விக் கற்கவேணும், வாச்சப்பா சாகாமலிருந்துக் கொண்டு வள மான அறுபத்து நாலுமாடு, காச்சப்பா கனகசபை நடனங் காணும் கனமான திரிலோகஞ் சுற்றிவாநீ, நாச்சப்பா வாசிகண் டால் நந்தியொளிகாணும் நலமான அஷ்ட சித்திக் கைக்குள் ளாச்சே. 160

புருடருக்கு வசிய மாத்திரை.

ஆச்சடா வயித்தியருக்கொன்று சொல்வேன் அப்பனே தேவாங்கின் கண்ணும் பித்தும், நாச்சடா ஆந்தையுட பித்துங்கூட்டு நலமான கருங்காகப் பித்துங்கூட்டு, வாச்சடா கருங்கோழிப்பித்துங்கூட்டு வளமான நரியினுட பித்துங்கூட்டு, காச்சடா கருங்குருவிப் பித்துங்கூட்டுக் கனமான உடும்பினுட பித்துங் கூட்டே, 161

கூட்டடா என்மகனே சொல்வேன் பாரு குருவான கன்னிப்பெண் நாதங்கூட்டு, வாட்டடா சாரையுட பித்துங் கூட்டு வளமான பச்சோந்தி பித்துங்கூட்டு, நாட்டடா புல்லா மணக்குங் கூட்டு நலமான சிறுபூனைக் காலிவேரும், காட்டடா லவங்கமொடு சாதிக்காயும் கனமான பத்திரியும் புனுகுங்கூட்டே. 162

கூட்டவே வகைக்குமொரு கழஞ்சகூட்டிக் குறிப்பான கல்வத்திற் போட்டுக்கொண்டு, ஆட்டவே கன்னியுட நாதம் விட்டு அப்பனே சாமமது ரண்டு மாட்டு, காட்டவே சுத்தசலம் விட்டு ஆட்டுக் கனமான மெழுகுபதந் தன்னைப்பார்த்து, வாட்டவே யுண்டைமணி போலுருட்டி வளமான நிழலுலர்த்தி செப்பில்வையே.

வையடா வயித்தியரே மனிதருக்கு வளமான கருவு கடுகளவெடுத்து, கையடா கோய்வந்த போதிலேதான் நலமாக கொடுத்துவிடு ஒரு போதில்தான், கையடா மறுபொழுது நோய்க்கெளுந்தமீய் நீ கைகண்ட வித்தைபடா உந்தனுக்கு, மைபடா மதிமங்கி நீ கேட்டதெல்லாம் மகத்தான வயித்தியனென் றீய்வார்பாரே. 164

மதிமயக்கப் பொடி

ஈயவே ஸ்ரீ கட்குத்தன் பஞ்சக்கருவெடுத் தியல்பாக கொடுத்துவிடு அதிமோகமாவார், வாயவே மகத்தான ஈடுச்சொன்னேன் வளமான மதிமயக்கப் பொடியைக்கேளு, ஆயவே குருவான திகைப்பூடோடு அப்பனே யிந்திரகோபங் குழியானைக் கூட்டு' மாயவே தும்பியுடன் சுழல்வண்டப்பா மகத்தான பச்சைப் பாம்பி னஞ்சுதானே 165

நஞ்சான வல்லூறின் நஞ்சுக்கூட்டு நலமான அடைக்கலத்தின் நஞ்சுக்கூட்டு, வஞ்சான * வக்கணத்தி நஞ்சுக்கூட்டு வளமான கருங்குரங்கு நஞ்சுக்கூட்டு, அஞ்சான கரும்பூனை நஞ்சுக் கூட்டு அப்பனே கருப்பு நாய் நஞ்சுக்கூட்டு, கஞ்சான கடை மருந்து சரக்கைக்கேளு கருவான மதனப்பூ கஞ்சாவித்துங்கூட்டே. 166

* வக்கணத்தி-நாமகாத்தி.

கூட்டப்பா மரமஞ்சள் கஸ்தூரிமஞ்சள் குருவான குங்குமப்பூ சந்தனத்துள், வாட்டப்பா பச்சைக்கர்பூரங் கஸ்தூரி வளமான சவ்வாது புனுகுங் கூட்டு, ஆட்டப்பா அதிமதூரஞ் சுக்குங்கூட்டு, அப்பனே * காடாற்று முன்னெலும்புக்கூட்டு, நாட்டப்பா வெட்டிவேர் விலாமிச்சோடு நலமாக தொட்டாற்கால் வாடிவேரே. 167

* காடாற்றுமுன்னெலும்பு-மயானத்திற் பிணஞ்சுட்டஎலும்

வேரோடு செங்காயுருவி வேரும் வேதாந்த பொற்கையான் வேருங்கூட்டு, ஆரோடு விடணிமூலிவேருங்கூட்டு ஆனதோர் கருமத்தின் வேருங்கூட்டு. நாரோடு வெண்தாமரையின் கிழங்குக் கூட்டு நலமான சிறியநங்கைப் பெரியநங்கை, வாரோடு ஆலின்மேற் கட்டுக் கொடியும் வாங்கு, வளமான வேருந்தான் கூடச்சேரே.

சேரப்பா செங்கழுநீர்ப்பூவுங் கூட்டுச் சிறப்பான * சிதேவி * குமரிவேரும், ஆரப்பா * நஞ்சுபாலை வேருங்கூட்டு அப்பனே * நரிமிரட்டி வேருங்கூட்டு, வாரப்பா வெண்குன்றி வேருங்கூட்டு வளமான * கருங்கையான் வேருங்கூட்டு, காரப்பா * நீலி நாயுருவி வேருங் கனமான ஆலின்கிழாலின்வேரே. 169

* சிதேவி—பொன்னுங்காணி-* குமரி-கற்றாழை- * நஞ்சுபாலை-கழுதைப்பாலை-* நரிமிரட்டி-கிலுகிலுப்பை-* கருங்கையான்-(கறுப்பு கரிசலாங்கண்ணி-* நீலி—அவுரி.

வேரான முத்தமொடு தேவதாரம் வேதாந்த ஆனையுட நெருஞ்சில்கூட்டு, ஆரான * மேனிவேர் தானுங்கூட்டு அப்பனே யெழுத்தாணிக்கூர் பச்சிலையுங்கூட்டு, வாரான ஆகாச கருடக்கிழங்கும் வளமான ஆகாச தாமரையுங்கூட்டு, கூரான ஐம்பத்து நாலுமாச்சு குறிப்பாக வகைக்கிரண்டுக் கழஞ்சுக்கூட்டே. 170

* மேனி-குப்பைமேனி,

கூட்டடா வேர்வகைகள் சூரணமே செய்துக் குருவான கடை மருந்து சூரணமேபண்ணி, வாட்டடா அகதமுள்ள சட்டிதன்னில் வளமாக சுத்தஜலம் படிரண்டிட்டு, காட்டடா இந்தவகை சூரணங்க ளெல்லாம் நலமாக கொட்டியதன் மேலேவைத்து, காட்டடாசுத்த ஜலமேல் தெளித்துச்சட்டிமூடி கணமான சீலைமண் செய்துலர்த்தே.

உலர்த்தடா அடுப்பேற்றித் தீயைமூட்டி யுத்தமனே யொரு ஜாம மெரித்தாயானால், வலர்த்தடா கடுங்கார பித்தமேறும் வகையாக இறக்கிக்கொண்டு சீலைவாங்கு, மலர்த்தடா பீங்கானில் போட்டுக்கொண்டு மலர்த்தான நிழலுலர்த்தி யெடுத்துக்கொள்ளு, அலர்த் தடா புதுகலயந்தன்னிற்போட்டு அணிசவாது புனுகுபூரம்வெட்டி வேர் தூளே. 172

தூளான இவையெல்லாம் வாசங்கட்டித் துருவான மஞ்சள் சீலைக்கலயஞ்சுற்று, ஆளானவயிரவர்க்கு வாலைபூசைசெய்து அப்பனே மோகினிமந்திரந்தான்சொல்லு, மாளான-மங்-றங்-கென்றே சொல்லு மகத்தான சிங்-வங்-மோகினிவாவாவென்று, காளானமோகினிக்கு லக்ஷமோதி நலமாக தூளெடுத்து மணிதர் மீதில்வீசே, 173

வீசயிலேமதிமயங்கி சனங்கள்தானும் வேதாந்திசொன்னபடி நடப்பார்பாரு, ஆசையிலே ஸ்ரீகளுடபேரைச்சொல்லி அப்பனே வீசிடுவாய் வேதாந்திரீதான், மாசையிலே மதிமயங்கி மோகவெறி கொண்டு மகத்தான ஸ்ரீகனப்பா வருவார்பாரு, காசையிலே கன்னியர்கள் கோடாகோடி கணமான பணங்கேட்டால் ஈவார்பாரே. 174

பாரடா ஞானிகளேயித்தொழில்கள்தானும்பரிவாகவுங்களுக்கு வேண்டாம்பாரு, ஆரடா இத்தொழில்கள் நிறுத்திக்கொண்டு அப்பனே அறுபத்துநாலுமாடு, வாரடா விஞ்ஞைவித்தை யிதுதானப்பா வளமான இதுவெல்லாந் தோஷம் தோஷம், நாறடாமறைப்பு மை-யொன்றுக்கேளு நல்லசித்தர்க்கதீதவித்தை யிதுதான்பாரே. 175

உருமாற்றுமை.

தானன மறைப்புமை சொல்லக்கேளு தருவான கருடனுடக் கண்ணும்வாங்கு, வானன கருங்கோழிக் கண்ணும்வாங்கு, வளமான காக்கையுட கண்ணும்வாங்கு, தேனன தேவாங்கின் கண்ணும் வாங்கு திருவான அட்டையது பத்துங்கூட்டி, கானன கருங் குரங்குக் கண்ணும் வாங்கு; கருதிக்கேள் உடும்பினுடப் பித்துங் கூட்டே. 176

கூட்டடா நஞ்சுபாலை வேரின்கீழே குருவான வண்டுண்டு எடுத்துக்கூட்டு, நாட்டடா மணற்றவளைக் காட்டிலப்பா நலமான சஞ்சீவி கருணையுண்டு, மாட்டடா எடுத்ததனைக் கூடச்சேரு மகத் தான பெரியசங்கை சிறியசங்கை, காட்டடா தலைப்பிண்டம் அமா வாசைதன்னில் கருவாக செத்ததென்றால் கண்ணும் வாங்கே. 177

வாங்கடா இவையெல்லாம் ரவியுலர்த்தி வளமான கல்வத்தில் சூரணித்து, ஆங்கடா கன்னியுட சாதச்சீலை அப்பனே யதிலிட்டு திறிதிறித்து, சாங்கடாத் தலைப்பிண்ட மண்டையோடுவாங்கி சர் வாங்கக் தலைப்பிள்ளை நெய்யவாங்கு, ஙங்கடா அகல்தனிலே நெய் யைவார்த்து நலமானத்திறியை நன்றாய் அகலில்போடே. 178

போடப்பா தீபமது ஏற்றிக்கொண்டு புகழ் பெரியக் கபால ஓடுகவிழ்த்துமூடு, வாடப்பா தீபமது எரிந்ததானல் வளமான கபாலத்தில் மைதான் பற்றும், காடப்பா மையைத்தான் வழித் துக்கொண்டு நலமான கஸ்தூரிப் புனுகுபூரம், சாடப்பா மத்தித்து தங்கசிமிழில் வைத்து சமனுக வழலை முப்பூக்கொஞ்சம் கூட்டே. 179

கூட்டியே சிமிழில்வைத்து வாமப்பூசைப்பண்ணி குறியான * லாடமைதான் பணவிடை தான்போடு, வாட்டியே மூவுலகும் காணமாட்டார் வளமான மறைப்புமைப் போலாருஞ் சொல்வார் காட்டியே வுன்முகத்தைக் காணவென்றால் கனமான மையைத்தான் கலைத்துப்போடு, நாட்டியே மையிருந்தால் சித்தர்க் காண்பார் நலமான நூல்களைத்தான் வாங்கிப்பாரே. 180

* லாடம்-நெற்றி-

பாரப்பா குகைக்குள்ளே அனேக நூல்கள் பரிவாக வைத்திரு பார் வாங்கிப்பாரு, ஆரப்பா நூல்களைத்தான் வாங்கிப்பார்த்தால் அப்பனே அனேகவிதந் தெரியும்பாரு, வாரப்பா தோய்ந்தாற்கால் சித்தனென்றபேரு வளமாக யென்னூலை வாங்கிப்பாரு, காரப்பா என்னூல் கற்பநூறில் சொன்னேன் கனமான பூசைசெய்து மூன் றும்பாரே. 181

பாரென்றே தீக்ஷையது நூறும்பாரு பரிவானகாவியந்தானாரு பாரு, ஆரென்ற என்னூல்நால் சாஸ்திரஞ்சொன்னேன் அப்பனே திறந்துவிட்டேனென்று சொன்னார், வாரென்ற சாஸ்திரத்தை வாங் கிக்கொண்டு வளமான குகைதனிலே பதனஞ்செய்தார், காரென்ற தர்க்கமத நேகஞ்செய்தேன் கனமான நூல்களைக் கொடுக்கேனென் றாரே. 182

கொடுக்கவே மாற்றமைப் போட்டுக்கொண்டு குருவான நூல் களைத்தானெடுத்துப்பாரு, வடுக்கவே சகலகலை காவியத்தில்தோன் றும் வளமான மறைப்புமையிருந்துதானால், நடுக்கவே மறைத்தசித் தனென்றபேரு நலமான சித்தரோடே கூடிவாழ்நீ, அடுக்கவே சித் தரோடுக்கவேணும் அன்பான மறைப்புமைச் செய்துவாழே. 183

வாழவே நால்யுகத்தைக் காணவேணும், வளமாக அதிசயத்தை அறியவேணும் ஆழவே யிறந்திறந்து பிறந்தாலென்ன அப்பனே வாசிபுடவன்மைக்காணு, காழவேநால்யுகத்தைக் கண்டேனையா கரு வாக பாத்துக்கிடாப்போனேன்' நாழவே நந்திசிவன்பாதஞ்சேர நல மாகநால்யுகந்தான் சென்றசேரே.

இரசகுளிகை

சேரப்பாமறைப்புமைக் கிடொன்றுமில்லை செயமான குளிகை யொன்றுவேணும்பாரு, வாரப்பா ரசகுளிகைச்சொல்லக் கேளு வளமான லிங்காசம்வாலைவாங்கு, ஆரப்பா மேனியென்றால் மேனி யல்ல அப்பனேமேனிசுண்ணம்விந்திற்போடு, காரப்பா விந்துதான் தெளிந்துப்போச்சு நலமாக வித்தை அயக்கிண்ணியினில் வாரே

வார்த்துமேரசங்கூடபலந்தான்வாரு வளமாக அடுப்பேற்றித்
தீபம்போலெரிநீ, ஆர்த்துமேரசமதுதான் வெள்ளிப்போல் கட்டும்
அப்பனேகட்டியது உருகும்போது, மார்த்துமே ஐங்காயங் கழஞ்சு
போடு மகத்தானசவர்க்காரமெழுகுகொண்டு, நார்த்துமேகுகைசெய்
துக்குகைக்குள்வைத்து நலமாக அயணசிக்கொண்டுக்குத்தே 186

குத்தியே மேலுமெழுகால் சில்லுப்போட்டுக் குறிப்பாகசெம்
மண்ணுபூமிக்கேகி, வத்தியேபுதைத்திடுவாய் அஷ்டநாள்தான் வள
மாகக் கட்டியதுரசமணிதானாகும், மத்தியே பூசைபண்ணுவாலைப்
பூசை மகத்தானரிஷிகளுக்குதியானபூசை, சத்தியேமனோ மணியே
யென்று சொல்லிச்சகஸ்திரமாய் தேவிக்குபானம்பண்ணே. 187

பண்ணயிலேமணி யெடுத்து வானம்பார்த்து பரிவாகஎனைக்
கொடுபோய்விடுதாயென்று, அண்ணயிலே வாயிற்ப்போட்டு மூடிக்
கொண்டு அப்பனே ஊமையனை தியானம் பண்ணு, வண்ணயிலே
கைலாசங்கொடு முடிகளெல்லாம் வளமாகக் கொண்டுபோம் பாரு
பாரு, நண்ணயிலே நீயிருந்தஇடம்வருகவேண்டி நலமாக நினைக்க
க்ஷணம்வருகும்பாரே. 188

பார்க்கவேரசகுளிகையிருந்துதானால் பரிவானவாசியது சுணங்
கனாகும், ஆர்க்கவே பாலிலேபோட்டுப்பாரு அப்பா சுறசுறென்று
பொங்கிவழிந்துப்போகும், வார்க்கவே வஸ்துவிலே போட்டுப்பாரு
வளமான*வஸ்துவெல்லாங்குடித்துப்போடும், நார்க்கவே நாதநீரில்
போட்டாயானால் நலமாநாத் நீரைப்பறக்கடிக்கும்பாரே. 189

பாருநீசவர்க்காரமெழுகுகொண்டு பரிவாக மணிமீதிற்பொதிந்
துக்கொண்டு, ஆருநீவெள்ளெருக்கன் நார்தான் கொண்டு அப்பனே
கயிறுகதிறித்துக்கொண்டு, வாருநீகயிற்றிலே கோத்துக்கொண்டு
வளமாக இருபிறமும் நீலக்கல்மணிதான்கோரு. மாருநீயிருபிறமும்
இருமுடிதான்போடு மகத்தான கழுத்திலேகட்டிக்கொள்ளே. 190

கொள்ளவேயுந்தனுக்குப் பேர்தானப்பா குருவான குளிகை சித்தனென்றுபேரு, அள்ளவே மறைத்தசித்தனென்றபேரு அப்ப னேமாருட்டசித்தனென்று, மள்ளவே அதிசியசற்குரு தானென் றும் மகத்தான ரிஷியென்றுஞ்சொல்வார்பாரு, கள்ளவேயோகி யென்றும்காதனென்றும் நலமான சிவயோகியென்பார்பாரே. 191

என்னவேயுலகத்திலதிசியங்கள் காட்டும் என்மகனே குளிகை யொன்றுலெடுத்த சித்தன், வன்னவேயுன்தேகம் தங்கம்போலாம் வளமானவாதசித்தனென்றும்பேரு, கன்னவே கருமிகட்குபலந்தா னுகும் கனமான ரசமணியைக்கழுத்திற்கட்ட, நண்ணவேசிவனுமை யுங்காணலாச்சு நலமான அண்டமுர்தங்கொள்ளுவாயே. 192

சிந்தூரம்

கொள்ளென்ற சிந்தூரஞ் சொல்லக்கேளு குணமானலிங்கத் தின்வாலேவாங்கி, விள்ளென்ற கல்வத்தில்வார்த்துக்கொண்டுவேதாந் தமுத்துநீர்விட்டு ஆட்டு, கள்ளென்றஒருஜாமம் ஆட்டினுற்கால் கன மானசூதமதுமடிந்துப்போச்சு, கள்ளென்ற கந்தகமோ பலந்தான் ரண்டு நலமான கலவத்திற்போட்டு அட்டே. 163

ஆட்டியேசெங்கையான் சாற்றில்ஜாமம் அப்பனே சத்தசலம் ஜாமம்ரண்டு, காட்டியே யரைத்துவில்லேத்தட்டிக்கொண்டு கனமான வில்லேதனைரவியுலர்த்தி, வாட்டியே அண்டவிந்தால் சீலேச்செய்து வளமான புளியதனல் குகைதான்பண்ணி, காட்டியே வில்லேவைத் துக்குகைதான்மூடி நலமான மண்சீலே யேழுஞ்செய்யே. 194

செய்யவே ரவியுலர்த்திப்புடந்தான் போடு ஜெயமான சிந்தூர மருணன் போலாம், வையவே செந்தூரமெடுத்துக்கொண்டு வள மாக குப்பிதனில் பதனம்பண்ணு, கையவே வாலேக்குப் பூசைப்பண் ணுநலமான மண்டலந்தான் தேனிற்கொள்ளு, ஐயவேகரைதிரைகள் மாண்டுபோகும் அப்பனே மேகத்தாலெடுத்த வெல்லாம் போமே,

போமடா காலாயிரத்து நானூறும்போம் புகழான சரீரமதுசட் டைத்தள்ளும், வாமடாகாயத்துக்காதிகற்பம் வளமான கற்பமது கொள்ளு கொள்ளு, நாமடா ரஜகற்பஞ்சொன்னேன் பாரு நலமான மாரணத்தின் முப்பூக்கேளு, சாமடா சீவசெந்து செடிகட்பூடு செய மான அதரணவேதமுப் பூதானே 196

மாரணமுப்பூ

முப்பான நரியண்டம் ரண்டுவாங்கு முடிவானகழுதையண்டம் ரண்டுவாங்கு, அப்பனே கருநாயின் அண்டம்வாங்கு ஆனதொரு பாலனுட அண்டம் வாங்கு, சப்பான கரும்பூனை அண்டம் வாங்கு சமர்த்தாக இவையைந்துங்கல்லுரலிலிட்டு, மப்பான சுத்தஜலம் வார்த்துக்கொண்டு மகத்தான * எழுக்காம்பால் ஜாடுஜாடே. 197

ஜாடயிலே புளிபோலேயாகுமப்பா சமர்த்தானபுளியதனை யெடுத்துக்கொண்டு, வாடயிலே பூநீறுகொண்டுவந்து வளமாக பாண் டத்திலிட்டுக்கொண்டு, நாடயிலே சுத்தஜலம் வார்த்துக்கொண்டுநல மாக கலக்கியதைதெளிவைவாங்கி, காடயிலே அடிவண்டல் ஊற்றிப் போடு கனதெளிவிலிப்புளியைக்கலக்கிடாயே. 198

கலக்கியே அடுப்பேற்றித் தீயைமூட்டுக் கனமான எண்ணெயு டனீர்கட்சுண்டும், வலக்கியே யிறக்கிப்பார்குழம்புபோலாம் வள மான குழம்பதனைப்பீங்கானி லூற்றி, மலக்கியேமுன் பூமிக்கேகிக் கொண்டு மகத்தான வயிரவரைத் தியானமோது, அலக்கியேயெட்டு நாளைக்குள்மைந்தா ஆனதொருபூத்துப் பூநீருகுமென்றே. 199

மென்றந்தபூநீற்றைக்குப்பிதன்னில் மேலாகவழித்தெடுத்துபத னம்பண்ணு, அன்றந்த அடியில் நின்றகசடெல்லாந்தான் அப்பனே வைத்தியத்திற்காகும்வைநீ, வன்றந்தமுப்பூவைப் பூசைப்பண்ணு வளமான முப்பூவடா எட்டெட்டுமாடும், கன்றந்த நாடிநின்ற முப் பூவென்றுங் கனமானவஸ்து வென்றுமிதற்குப்பேரே. 200

---

* எழுக்காம்பு-எருக்கு உலக்கை.

பேரானமுட் பூவடா ஆதிவித்தை பிறிவான அறுபத்து நாலு மாடும், ஆரான ஐம்பூத மிதிலொடுக்கம் அப்பனே தொண்ணூற் ரூறு மிதிலடக்கம் வாரான வாதமொடு பித்தசேஷ்மம் வகையாக இதிலொடுக்கம் வகுத்துப்பாரு காரான பிரமனொடு விட்ணுநத்தி ரன் கனமயேசன் சதாசிவனு மொடுக்கந்தானே. 201

தானான முப்பூவை யாருஞ்சொல்லார் தனதான முப்பூவின் பெருமை மெத்த, வேனான வேறென்று மிதற்குப்பேரு வேதாந்த முப்பூவென் றிதற்குப்பேரு, கானான கருவென்றுங் குருதானென் றுங் கருத்தான சிவமென்றுஞ் சத்தியென்றும், மானானமதுவென் றும் வஸ்துவென்றும் மகத்தான நாதமென்றும் விந்துவென்றே.

அஞ்சன் மை.

வென்றென்ற மாரணத்தின் முப்பூச்சொன்னேன் வேதாந்த அஞ்சானத்தின் மைதான்கேளு, அன்றென்ற தேவாங்குக் கண் ணும்வாங்கு, அப்பனே கருங்கழுதைக் கண்ணும்வாங்கு நன் றெனற கரும்பூனைக் கண்ணும் வாங்கு, நலமான கழுதையுட பித் துங்கூட்டு, கன்றென்ற குரங்கினுட கண்ணுங்கூட்டு கருகன்னி யுடவிலக்குச் சீலையென்றே. 203

சீலான பாலனஞ்சுக் கொடிஙயவாங்கி சிறப்பாக இவையெல் லாம் உலர்த்திக்கொண்டு, ஆலான சரக்கையெல்லாம் உலர்த்திக் கொண்டு அப்பனே கல்வத்தில் தூளாய்ப்பண்ணு, வாலான சீலை தன்னில் திறிதிறித்து வளமான கழுதையுடகபாலம்வாங்கு மாலான காரெள்ளின் எண்ணெய்வாங்கி மகத்தான அகல்தனிலே வார்த்துக் கொள்ளே. 204

வார்த்தப்பா திறியதனை விளக்கிலேற்றி வளமான தீபமது ஏற் றிக்கொண்டு, காற்றப்பா போகாமல் கபாலமூடி கடிதான எரி யிடவே மைதான் பற்றும், மார்த்தப்பா வழித்தெடுத்துச் சொல் லக்கேளு மகத்தான முப்பூவும் புனுகும்பூரம், சார்த்தப்பா கஸ் தூரி யிவைநாலுந்தான் சமர்த்தாகமத்தித்துச் சிமிழில்வையே. 205

வையப்பா அஞ்சனு தேவிக்குத்தான் வளமாக பூசித்து பதனம் பண்ணு, ஐயப்பா இச்சிமிழைத்திறந்துக்கொண்டு அப்பனே வெற்றிலையில் தடவிக்கொண்டு, கையப்பா கையில்வைத்துப்பார்த்தாயானல் கனமான திரிலோகங் காணுவாய்நீ, மையப்பா புதைகளைத்தானெடுக்கவேண்டி மகத்தாம் பூனைக் கண்ணன் கையிற்போடே.

போட்டப்பா பார்த்தாற்கால் பாதாளந்தோன்றும் புகழான பொருளெல்லாங்கண்ணிற்காணும், வாட்டப்பா அஞ்சனமைப்போலேயுண்டோ வளமான குபேரனென்ற பேருமாச்சு, நாட்டப்பாஇதுவொன்றமிருந்தால்போதும் நலமானவாதமது சகந்தானுச்சு, காட்டப்பா அனுமனுடன் வீரபத்ரன் கனபூத பிரேதமெல்லாந்தோன்றும்பாரே. 207

பாரப்பாபொருள்காக்கும் காளி ஐயன் பரிவாக எதிர்த்துவந்தால் சொல்லக்கேளு, காரப்பா விளக்கேற்றுந்திறிதான் சொன்னேன் கருவாக எடுத்துநீ யேற்றிக் கொள்ளு, ஏரப்பா விளக்கேற்ற ஓடிப்போகும் என்மகனே எனது கலைக்கியானம் பாரு, ஆரப்பா அறிவார்கள் கலைக்கியானசித்து அப்பனே கலைக்கியானம் ஆர்காண்பாரே. 208

காணப்பா கலைக்கியானம் பார்த்தப்பேர்க்கு கனமான சித்தனென்ன அவர்க்கீடுண்டோ, வாணப்பா நூலிருக்குமிடத்திற் கேகு வளமான பணிவிடைதான் செய்துவாநீ, ஆணப்பா அவர்மனது கரைந்ததானல் அப்பனே நூலீய்வார் பாகஞ்சொல்வார், மாணப்பா மடையருக்கு ஈயமாட்டார் மகத்தான சிவயோகிக்கீய்வார்பாரே.

பாரடா நூலீய்ந்தோர் மனநோகச் செய்தால் பரிவான வல்வினைகள் வந்துசேரும், வாரடாபொருளீய்ந்து நூலைவாங்கு வளமான பொருளுக்கு ஈயாவிட்டால், காரடா பணிவிடைகள் செய்துவாங்கு கனமாக அவர்கையால் கொடுக்க வாங்கு, ஈாரடா கைப்பதராய்த் திருடிக்கொண்டால் நலமான சாபம் வந்திடிக்கும்பாரே. 210

வல்லாரைக் கற்பம்

பாரென்ற வல்லாரைக்கற்பங்கேளு பரிவான விந்துவடா நாத விந்து, ஆரென்ற நாதமடா சத்திச்சித்தி அப்பனே விந்து வடாசிவ மேயாகிக், காரென்ற அகாரமடா விந்துவாச்சுக்கனமான நாதமடா உகாரமாச்சு, நாரென்ற சத்திசிவங் கூடியப்பா நலமான சுக்கில சோணிதமுமாச்சே. 211

ஆச்சென்ற மூலமடா ஆறுதாரம் அப்பனே மணிபூர வீட்டி லப்பா, வாச்சென்ற வாசியது ஓடுங்கும்வீடு வளமான சத்திசிவமொ டுங்கும்வீடு, காச்சென்ற அப்புவது குடியிருக்கும்கனமான விட்ணு அவர் கொலுவிருப்பார், நாச்சென்ற நந்தியவர் வாசஞ்செய்வார் நல மான நந்தியடா மூளைவாங்கே 212

வாங்கென்ற மாதமதுபத்தாந் திங்கள் வளமான மூளையடா நந்திரந்தி, ஆங்கென்ற பூரமதைவாங்கிக்கொண்டு அப்பனே சிவ சுண்ணங் கழஞ்சுகூட்டு, மாங்கென்ற புரமடா விந்து விந்துமகத் தான விந்துவடா நீராய்ப்போகும், சாங்கென்ற புரமதை நாற்பது நாட்கொள்ளு சமர்த்தான சட்டைத்தள்ளியுடல் பொன்னுமே.

பொன்னான தேகமதை வைத்துக்கொண்டுப் புகழானகற்ப வகையின்னங்கேளு, அன்னான ஆதியடா அந்தம் அந்தம் அப்பனே அண்டமடா சோதிசோதி, விண்ணான சோதியடா வீரம்வீரம் விள ங்குகின்ற சோதியடா வீரகற்பம், கண்ணானகோரையடா வீரம்வா ங்கிக் கனமான பூநீறில் சுத்திப்பண்ணே. 214

பண்ணடா பாண்டத்தில் குழித்தயிலம்வாங்கு பரிவான தயில த்தில் வழலைச் சுண்ணம்போடு, கண்ணடா வயிரவர்க்குப் பூசைப் பண்ணு கனமான வீரகற்பமண்டலமேகொள்ளு, வண்ணடா வர்சிக் குடயிர்தானுகும் வளமான சட்டையது எழுந்தள்ளும், நண்ணடா எட்டானமாதம் வாங்கு நலமான மற்றொன்றிலாகாதுபாரே. 215

பாரடா என்மகனே சொல்வேன்கேளு பகாரிய சோதியடா சோதிகற்பம், ஆரடா சொல்வார்கள் சோதிக்கற்பம் அப்பனே சொல்லவில்லை சொல்லக்கேளு, வாரடா வன்னியடாதேயுதேயு வளமான தேயுவடா செம்மை செம்மை, காரடா செம்மை யென்னநீலிப்பூண்டுக் கனையான பூண்டப்பா ஆர்காண்பாரே. 216

காணடா சொல்லுகிறேன் கேளுகேளு கருத்தான நாதமடா கமலத்துண்டு, வாணடா வல்லியென்றும் மௌனகற்பம் வளமான கற்பமடா நாதகற்பம், தோணடா சோதிபதுகமலத்துண்டு சொற்பெரியசமலமடா உந்திக்கற்பம், ஆணடா ஆறுந்திங்கள் வகுத்துப் பாரு அரனெடுத்துப் புசித்திட்டக்கற்பந்தானே. 217

தானனை செம்மையடா சிவப்புமெத்த தாரணியி லனேகமுண்டநிந்துக் கொண்டால், வானனவாசியடா தேகம்பொன்னும்வளமான தேகத்திற்கழிவோ இல்லை, தேனன தேகமது வஜ்ரதேகம் திவட்டாதபோதமடா சோதிகற்பம், ஆனன அடிநாவி லமுர்தமூறும் அப்பனே மௌனமென்ற அமுர்தங் கொள்ளே. 218

கொள்ளென்ற அமுர்தமது மௌனவாழ்வு குணமான அமுர்தமடா போதை போதை, விள்ளென்ற பொருளெல்லாம் விள்ளும் விள்ளும் வேதாந்த ஞானமெல்லாம் மனதிற்காணும், அள்ளென்ற அறுமுகமுங் கண்ணிற்காணும் அப்பனே பன்னிரண்டஸ்தந்தோணும், கள்ளென்ற கருவுதான் அறிவிற்காணும் கனமான கெவுனசித்திக்குளிகைசித்தே. 219

சித்தாகபிறப்பதற்கு ராசிவேணும் சிவபதவிகிடைக்க வென்றால் தர்மம்வேணும், மத்தாக அவருக்குயோகஞ்சித்தி வளமான சிவயோக ஞானசித்தி, கத்தாதே யொருவருடப் பொருளுக்குத் தான் நலமான ஸ்ரீகளையும் நத்தவேண்டாம், வித்தாரமானதொரு விளையாட்டெல்லாம் வேதாந்திக்காகாது விரும்பினேமே, 220

மதியமூர்தகற்பம்

விரும்பினோ மதியமூர்தகற்பங்கேளு வேதாந்த கற்பமடா சவர்க்காரந்தான், அரும்பினோம் காரமுடன் சாரமாகும் அப்பனே விந்துவடனாதமாகும், நரும்பினோம் அண்டவிந்து மதியமூர்தமாகும் நாதாந்த விந்துவடா செந்நீரப்பா, கரும்பினோம் கரும்பு ரசங்கொண்டு விட்டால் கனமான யாக்கையது வலுத்துப்போமே. 221

போமப்பா யாக்கையதற் கழிவோ இல்லைபொருளானகற்பமடா கொள்ளுக் கொள்ளு, வாமப்பா மதியமூர்தங்கொண்டு விட்டால் வாரிதியா மஞ்சுவயதாகுமப்பா, நாமப்பா வயது சொல்ல முடியாதப்பா நமனேது கொடியண்டங் கட்டலாம்பார், காமப்பால் காணற்பால் ரண்டுங்கொள்ளக் கனமான சூரியன் போல தேகமாச்சே.

அமுரிகற்பம்

ஆச்சப்பா அமுரிகற்பஞ் சொல்லக்கேளு அப்பனே சுத்த ஜலம் வாங்கிக்கொண்டு, பேச்சப்பா பேசாமல் அண்டச்சுண்ணம் போடு பேரான அமுரியடா மண்டலமேகொள்ளு, வாச்சப்பா கற்பமது கொண்டாயானால் வளமான வாசிக்கு முப்பீதாகும், நீச்சப்பா வெகுநீச்சு அமுரிநீச்சு நிசமான அமுரியடா பனிநீராமே. 223

ஆமப்பா நிகண்டிதுதான் பதனம்பண்ணு அப்பனே பிந்நூல் போல் சொல்லாதையா, வாமப்பா சித்தர்களநேகஞ்சித்தர் வளமான நூற்கெல்லாங் குருவாம் இந்நூல், காமப்பா கருக்களெல்லாந் திறந்துச்சொன்னேன் கனமான கருக்கிடை நிகண்டிதுதானப்பா, நாமப்பா இந்நூல்தான் சொல்லிப்போட்டேன் நலமான நூலிதுதான் அடக்கம் பண்ணே. 224

பண்ணுவது இந்நூலைப்பதனம் பண்ணு பங்கயத்தினமூர்தமதைபண்பாய்க்கொள்ளு, அண்ணுவதுவாசி நீபழக்கம் பண்ணு அப்பனே யில்லாவிட்டால்மாண்டேபோவாய், மண்ணுவதுமாளாமலிருக்கச்சொன்னேன் மகத்தான சித்தனடா வாழ்வீர் வாழ்வீர், கண்ணுவது கண்ணோட்டம் பாருபாரு கனமான அமூர்த்ததைக் கொள்ளுக்கொள்ளே. 225

வசியதைலம்

கொள்ளவே வசியத்தின் தயிலங்கேளு குருவான ஐந்துருவாம் பிண்டம்பிண்டம், விள்ளவே சற்குருதான் ஐந்தாந்திங்கள் வேதாந்த பிண்டமடா ஐங்கோலபிண்டம், கள்ளமேயில்லை யடாபிண்டம்வாங் கிக்கனமான பிண்டத்தையுலர்த்திக்கொண்டு, மள்ளவே கல்லுரலிலி ட்டுக்கொண்டு மகத்தாஞ்சுத்தஜலம் வார்த்திடித்திடாயே. 226

இடிக்கவே யெழுவுலக்கை யதனாற்சாடு இதமானபிண்டமடா மெழுகாய்ப்போகும், பிடிக்கவே பாண்டத்திற் போட்டுக்கொண்டு பிரபல்லியமான தொருகுழிதான் தோண்டி, முடிக்கவேகீழையொரு குடுவைவைத்து முதலானபாண்டத்தில்*தமருபோட்டு, அடிக்கவே பாண்டத்தை யதன்மேல்வைத்து அப்பனே மண்சீலையேழுஞ்செய்யே

செய்யப்பா பாதிமட்டும் மண்ணுபோடு கெயமான நூறெரு வில்புடந்தான்போடு, ஐயமேயில்லாததயிலம் வீழும் அப்பனே தயி லத்தைப்பூசித்துவைநீ, கையவே வயிரவர்க்குப்பூசைப்பண்ணி கன மானதயிலமதை பரணிவைத்து, கையவே நகாரத்தையுச்சரித்து நல மானவிஷ்ணுவை நீ பூசைப்பண்ணே. 228

பண்ணப்பாதயிலத்தை வசியத்துக்கு பண்பாக வசியமையை யெடுத்து ஆடு, வண்ணப்பா தயிலமதுவசியத்துக்கு அப்பனேகுரு விதுதான் ஆடு ஆடு, வண்ணப்பா தயிலம்விட்டால் வசியமேது வள மானதயிலஞ்சற்குருதான்பாரு, கண்ணப்பா ஐங்கோலமிதுதானப் பாகனமான என்னிகண்டில் திறந்திட்டேனே. 229

வசியவிபூதி

திறக்கமில்லா வசியத்தின் விபூதிசொல்வேன் திறமானவிபூதிய டாசாம்பல் சாம்பல், அறக்கமில்லா சாம்பலப்பாமயேசன் சாம்பல் அப்பனேயிது விட்டால் வசியமாமோ, வறக்கமில்லாமுறைசெய் தால்வசியமாமோ வளமானமுறை கண்டால் சித்தன் சித்தன், நறக்க மில்லாசகஸ்திரமாஞ்சீவன் செத்தால் நலமானதலைப் பிண்டம்வே ணும்பாரே. 230

* தமர்-துவாரம்.

பாரப்பா செத்தவுடன்மயானப்போவார் பரமான காடென் றும்புடந்தான் செய்வார், ஆரப்பா காடாற்று முன்னே நீபோய் அப்பனே சாம்பலுடன் எலும்புவாங்கு, நாரப்பாகல்வத்திலிட்டுக் கொண்டு நலமான சிறுநீரின் நாமஞ்சொல்வோம், வாரப்பா சுத்தச லம்பெண்ணீரென்றும் வளமான அமுரியென்றும் ஆண்ணீரென்றே.

நீரானநீரிதற்கு எதிர்நீருண்டோ நிசமானநீரிதற்கு அனந்தம் பேரு, வாரானசுத்தசலம் விட்டு ஆட்டு வளமாகவழித்தெடுத்துபில் லைசெய்து, நாரான *மதிதனிலே யுலர்த்திக்கொண்டு நலமானபத்தெ ருவில் புடந்தான் போடு, ஆரானவெண்ணீறாய் நீறிப்போகும் அப்ப னே திருநீற்றை பதனம் பண்ணே. 232

* மதி-சந்திரன்.

பண்ணப்பாருத்திரர்க்குப் பூசைப்பண்ணு பண்பானவாமத் தின் பூசைப்பண்ணு, கண்ணப்பாவிபூதிதன்னை மேருக்கேற்று கன மான விபூதிபடாபூசுபூசு, வண்ணப்பா வழிதனிலே போனுபானல் வளமான உலகமெல்லாம் அடியில் வீழ்வார், நண்ணப்பா மனுஷா ண்டைப் போனுயானல் நலமான ராசர்சரணஞ் செய்வாரே. 233

செய்யப்பா உன்தேகம் வச்சிரம்போல் மின்னும் செயமான மனிதரப்பாமோகமாவார், நையப்பாஸ்ரீகளுன்னைக் கண்டாரானல் நலமான மாயவெறிகொண்டெழும்பி, ஐயப்பா அரைகொடியில் மோகங்கொண்டு அப்பனே யுன்னடியில் வருந்துவார்கள், கையப்பா தாயெனவே பூசித்துக்கொண்டு கனமானமண்ணையள்ளி தம்பித்துப் போடே. 234

போடயிலே வெறிதெளிந்து சரணஞ்செய்வார் புகழான மாமு னியோரிஷியோ வென்பார், ஆடயிலே சன்னுசி சித்தனென்று அப் புறத்தில் போயிடுவாள் மாயாகன்னி, வாடயிலேமயக்கத்தால் வந்து விட்டு வளமான விதியினுல் வந்தோ மென்பார், காடயிலே ஊருக்கு மேற்கேகுந்து கனமான விபூதிதனை * லாடம் பூசே. 235

---

* லாடம்-நேற்றி.

பூசையிலே மாதருன்னைக் கண்டாரானால் புகழ்பெரிய நாதனரி வர்தானென்பார், ஆசையிலே யதிமோகங்கொண்டு உன்மேல் அப்பனே நீகேட்டதெல்லாமீவார், வாசையிலே மனிதருன்னைச் சுற்றிக் கொள்வார் வளமான முன்சொன்ன மறைப்புமைபோடு, காசையிலேகள்ளரடா அனேகம் பேர்கள் கனமான அவரிடத்தில் முகங் காட்டாதே. 236

காட்டாதேமறைப்புமை போட்டுக்கொண்டு கனமான நீயிருக் குமிடத்திற்கேகு, மாட்டாதேமறைத்த சித்தனி வர்தானென்பார் மகத்தானசித்தனடாஐயோ வென்பார, வாட்டாதே போய்விட்டார் ரிஷதானென்பார் வளமான இருஷ்ய-ாமகத் தாஞ்சித்தன், காட்டாதே யொன்றுந்தான் சொல்லவில்லை நலமான என்னுடைய விதி யென்பாரே. 237

விதியானபோதமயங் கொள்ளவேணும் வேதாந்த பூரணத்தை யறியவேணும், சதியானசதிபுருஷன் நிலைக்கவேணும் சமர்த்தான ஆணவத்தையொழிக்கவேணும், மதியானமதியமுர்தங் கொள்ளவேணும் மகத்தானவாசியைதான் புசிக்கவேணும், கதியான சிதம்பரத்தைக்காணவேணும் கதிகெட்டவண்டர்களே அலையாதேங்கள் 238

அலையாமல் சத்தியமே நிலைக்கவேணும் ஆதாரமுள்ளபதி நோக்கவேணும், கலையானபன்னிரண்டும் பழக்கவேணும் கனமானவாசியது ஒடுக்கவேணும், மலையாமல் சொல்லிவிட்டேன் இந் நிகண்டில் மகத்தான அறிவுள்ளோர் தேர்வாரையா, வலையாமல் கை முறைசெய்பாகஞ் சொன்னேன் வளமானநந்தீசரருளினாலே. 239

அருவான இந்நூலை வெளிவிடாதே அப்பனே நிகண்டிதுதான் அடக்கம்பண்ணு, கருவான என்னூலைப் பழித்தபேர்க்கு கனமான அந்தர இடிதான் வீழும், மருவான என்னூல்போல் நூலேசொல்லார் மகத்தான சித்தர்களோ சொல்லார்பாரு, வருவான என்னூலைப்பார்த்தாரானால் வலுவான தவயோகி யென்றுபேரே. 240

போனநூல்பாடி போட்டதென்ன பிரபல்லியமான தொரு மனிதர்க்காக, காரான பாட்டெல்லாம் பொருள்தானையா கருத்தானபாடலப்பா எழுதுதற்கு, பூரானபனை யோலைக்கிடையாதப்பா பகரியபொருளிருக்து மோடனுவார், வாரானவழிதுறையுந்தெரியச் சொன்னேன் வளமான நூலினு'-வளப்பஞ் சொன்னேனே. 241

சொன்னடா மனிதரவர் பிழைக்கச் சொன்னேன் சொற்பெரியகாரத்துக்குறுதிச் சொன்னேன், வன்னடா வழிதுறையுங் காணச் சொன்னேன் வள்மான கருவுடனே குருவுஞ் சொன்னேன் மன்னடா மதியமுர்தங் கொள்ளச்சொன்னேன் மகத்தான வாசியுட வளமைச் சொன்னேன், அன்னடா ஆகியந்த மறியச்சொன்னேன் அப்பனே அடிமுடியும் நடுச்சொன்னேனே. 242

நடுவான முப்போடு மெழுது சொன்னேன் நலமான ஊமையென்ற எழுத்துஞ் சொன்னேன், வடுவான மாணிக்கப் புளியுஞ் சொன்னேன் வளமான சுண்ணங்கள் ஜெப நீர்ச்சொன்னேன், முடுவான கருதலங்கள் திறந்து சொன்னேன் முக்ப முள்ள வழலையின் பேர் நன்முய்ச் சொன்னேன், வடுவான சிவசத்தி நன்றுய்ச்சொன்னேன் மகத்தாம் வயித்தியத்தின் சூக்ஷஞ் சொன்னேன். 243

சருவ வியாதிக்கும்—காந்தச் சேந்தூரம்.

சொன்னமொழி வயித்தியமொடு வாதஞானம் சொற்பெரிய யோகமுடன் மாந்திரிகஞ் சொன்னேன், கன்னமொழி கருக்கிடைகள் தெரியச்சொன்னேன் கனமான ஜாலத்தின் சூக்ஷஞ் சொன்னேன் வன்னமொழி மனிதருக்கு நோய் கண்டாற்கால் வளமான மருந்தொன்று சொல்லக்கேளு, அன்னமொழி காந்தமதுபலந்தான் வாங்கு அப்பனேஅயப்பொடிதான் பலமும்வாங்கே. 244

வாங்கப்பா இவையிரண்டுஞ் சுத்திச்செய்து வளமானகல்வத்திலிட்டுக் கொண்டு, காங்கப்பா கெந்திபது பலந்தான்ரண்டு நலமான வீரமது பலந்தானென்று, ஆங்கப்பா அரக்கயிலே பனிசலந்தான் வாரு அப்பனே யிருஜாமம் ஆட்டிக்கொண்டு, மாங்கப்பா கௌரியுடன் பூரம் சூதம் மகத்தான கறியுப்புக் கூட்டச்சேரே. 245

சேரப்பா வகைக்கு அரைப்பலமுங் கூட்டு செம்மையுடன் கல்வத்திற் போட்டுக்கொண்டு, வாரப்பா செங்கைபான் சாற்றாலா ட்டு வளமாக அதின்பிறகு சொல்லக்கேளு, ஆரப்பா அறிவார்கள் முத்து நீரை யப்பனே பதில்ஜாமம் ஆட்டிக்கொண்டு, நாரப்பா வழித்தெடுத்து பில்லைச்செய்து நலமானகோழிபுடம் தன்னைப் போடே. 246

போட்டெடுக்க முருக்கம்பூ போலேயப்பா புகழான செந்தூ ரங் காந்திமெத்த, வாட்டெடுக்கப் பாண்டுவுக்குச் சுக்குத் தேனில் வளமாக கொடுத்துவிட பறந்துப்போகும், நாட்டெடுக்க திரிகடுகு சூரணத்தில் ளமாக கொடுத்துவிட க்ஷயமெட்டும் போம், காட்டெடுக்க மேகமது இருபதுக்கும் கனமான அறுபான மறிக் துக்கொள்ளே. 247

கொள்ளப்பா தேனிலேகொண்டாயானால் கூறுகெட்ட தோஷ மெல்லாம் குலைந்துப்போகும், விள்ளப்பா கொடிவேலிக் கியாழத் தில் தான் வேதாந்த செந்தூரம் போட்டுக் கொண்டால், கள்ளப்பா அறுபத்து வாலும்போகும் கனமான சுரமுடனே யீளைசன்னி மூள்ளப்பா ஜன்னி பதின்மூன்றம் போகும், முறையான இம் முறைபோல் சொல்லார்பாரே. 248

முப்பூவின் சேந்தூரம்.

சொல்லவே யின்னமொரு செந்தூரங்கேளு சொற் பெரியமுப் பூவின் செந்தூரமையா, அல்லவே கல்வத்தில் முப்பூ விட்டு அப் பனே சங்குநீர் அமுர்தம் வார்த்து, பெல்லவே அரைத்தபின் முத்துநீர் வார்த்து மேலான கல்வத்தில் ஜாமம் ஆட்டு, கல்லவே வழித்தெடுத்து பில்லைச்செய்து கனமான ஐங்காயக்கவசம்போடே.

போட்டப்பா அதன்மேலேவிந்தால் சீலைப்புகழ் பெரியமண் சீலை யதன்மேல்போடு, ஆட்டப்பா முழப்புடந்தான் போட்டுத்தீரு, அப்பனே அருணன்போல் காந்திவீசப், நாட்டப்பா செந்தூரம் நாற்பது நாட்கொள்ளு, நலமான சட்டைத்தள்ளித் திரேகம் பொன்னும், காட்டப்பா செந்தூரம் பூரணாதி கனமான பூரணாதி கொள்ளுக்கொள்ளே. 250

கொள்ளலை கெல்லிப்பருப்பளவுக்கொள்ளு கூறுன வாசியது மூலத்தைதரும், விள்ளவேயான் விண்டோன் யார்தான் விண்டார் வேதாந்த தன்வந்திரி விண்டேனையா, கள்ளமையில்லாமல் சொன்னேனையா, கருத்துள்ள ராசிவான் தேர்வீர் தேர்வீர், மெள்ளவே தருமமென்றக் கேள்வியுள்ளோன் மென்மைலும் வழ்வீர்கள் மெத்தநன்றே. 251

நன்றாக இருப்பதற்கு இவ்விதமாய்க்கேளு நலமில்லா மடையர்களும் செவிடர்காணும், குன்றாக குருவென்றும் ஆசிரியனென்றுங்கூறு, கெட்டமடையர்களோ மெத்தவுண்டு, பன்றாக காவி கட்டி லங்கோடுக்கட்டி பரமான என்பேரன் யோகதண்டு வைப்பார் வன்றாக கர்மமென்ற சண்டாளஞ்செய்வார் வளமான கர்மிகளாய் மடிவார் பாரே. 252

பாரடா அவரிச்சையாலேசெய்த பாவமடா எத்தேசம் போனாலென்ன, ஆரடா அகஸ்தியருட முத்திரையைப் பெற்றால் அப்பனே மாற்றமென்ற சித்தன்பேரு, சாரடா அவதரித்தால் சித்தனாவாய் கனமான இச்சைப்படி தரித்தோர்கர்மி, வாரடா கர்மியவர் தரித்தாரானால் வளமான மதத்தால் கெட்டலைவார் பாரே. 253

பாரென்ற இல்லறத்தில் யோகஞ்செய்து பரிவாக பூரணத்தை கொண்டு தேர்ந்து, ஆரென்ற யாக்கைகரு கற்பங்கொண்டு அப்பனே சாரணையின் பழக்கம்பண்ணி, வாரென்ற மறைப்புமைச்செய்துக்கொண்டு வளமான சாரணை கொண்டேறிவாரீ, நாரென்ற பிரமன் பணிவிடைகள் செய்வான் நலமான ஆயிசுதான் வளர்ந்துப் போச்சே. 254

போச்சென்றீ வாதத்தாலென்னவாகும் பொருளான செவிடர்களே யோகம்பாரு, ஆச்சென்ற யோகமதை விட்டீரானால் அப்பனே சடலமதற் கழிவேயாச்சு, வாச்சென்ற் மாய்கையினால் வாதம் பார்ப்பார் மடையருக்கு யோகமது கசப்புமாச்சு, நாச்சென்றவாத மது மடையருக்கு நலமாக தித்திக்குமட்டிமாடே, 255

மாடப்பா புத்திக்கெட்ட மடையருக்கு மகத்தான அறிவது தான் விளக்கமாமோ, ஆடப்பா அவரவர்கள் மகத்தால்தானும் அப்பனே கெட்டலைவார் மதங்களேறி, காடப்பா புத்தியுள்ளோன் சிவயோகிக்குக் கனமான கல்விகள்தான் விளக்கமாகும், நாடப்பா நாடெல்லாஞ் சுற்றினலும் நலமான கர்மமது விடாதுபாரே. 256

பாரப்பா என்மகனே* அஸ்வனியேகேளு பண்பான யோக மடா ஞானப்போக்கு, ஆரப்பா அறிவார்கள் ஞானப்போக்கை அப்பனே ஞானமடா யோகவாழ்வு, காரப்பா கனகசபை நடனங் கண்டால் கனமான வாழ்வதுதான் பாருபாரு, நாரப்பா நந்தீசர் கலைக்கியானம்பாரு நாதாந்த வேதமடா கலைக்கியானப்போக்கே.

போக்கப்பா கலைக்கியானம் நந்தீசர்ச்சொன்னார் புகழ்பெரிய அதையெடுத்துத் திறந்தேனப்பா, வாக்கப்பா நந்தீசர் வாக்கிய மென்று வளமானசித்தர்கள் பணிந்தார்பாரு, மாக்கப்பா சகலகலை பதிலேதோன்றும் மகத்தான அறிவுள்ளோர்க் குருநூலப்பா, நாக் கப்பா முன்சொன்ன வாசிச்சூக்ஷம் நலமான சொச்சத்தைச் சொல் வேன் கேளே, 258

சத்திபீட நாற்பத்து முக்கோணங்களு மெழுத்துகளும்.

கேளப்பா பீடமது சத்திப்பீடம் கெடியான பீடமது சொல் வேன்கேளு, நாளப்பா நவகோணங் கீறிக்கொண்டு நலமாக அதிலே ஐங்கோரணங்கீறி, வாளப்பா அதனடுவே முக்கோணங்கீறி வள மானகோணமடா மகத்தான கோணம், ஆளப்பா நவகோணத்தின் மேலேகேளு, அப்பனே வட்டமொன்று வளையம்போடே. 259

போடப்பா நாற்கோணம் நாற்சதுரம்போடு பொருளானசதுர மடா இருவகையாய்ப்போடு, வாடப்பா வரைப்பிடித்து முக்கோணங் கீறி வளமாக சுற்றிலுந்தான் முக்கோணங்கீறு, நாடப்பா சுற்றிலுந் தான் கீறிக்கொண்டால் நலமான கோணமடா நாற்பத்துமுக்கோ ணம், சாடப்பா சுயமத்தை நடுவேநாட்டு சமர்த்தான ஊமையடா நடுவேவையே 260

வையப்பா ஊமைதனை முக்கோணத்தில் வளமான * ஐங் கோணத்தட்சரகைக்கேளு, கையப்பா உம்மென்று நடுவேபோடு கனமாக சுற்றிலுந்தான் போடக்கேளு, நையப்பா நங்கென்றும் உங் கென்றுமாட்டு நலமான வங்கென்றும் ரீங்கென்றுமாட்டு ஐயப்பா சிங்கென்றும் றங்கென்றுமாட்டு அப்பனே மங்கென்றும் லங்கென் றுமாட்டே. 261

* ஐங்கோணத்தட்சரம்—ஐங்கோணத்து-அக்ஷரம்.

மாட்டவே யங்கென்றும் டிங்கென்றுமாட்டு வளமான ஐங் கோண அக்ஷரத்தைச் சொன்னேன், வாட்டவே நவகோணத் தெழுத்தைக்கேளு வளமான மேல்முடியில் அகாரம்போடு, நாட்ட வேயதி லுத்தரம் இகாரம்போடு நலமான வடக்கினிலே உகாரம் போடு, காட்டவே ஈசானியத்தில் மகாரம்போடு, கனமான கீழ்த் திசையில் ஓங்காரம்போடே. 262

போடடாசனிமூலை அவ்வும்போடு புகழான தக்ஷணத்தில் கிலியும்போடு, நாடடா கன்னியுட மூலையில்தான் நலமான ஸ்ரீயு மென்று நாட்டிடாய் நீ, வாடடா ஒருகோணம் அப்புறத்தைப் பொடு வளமான பத்தினலும் அடங்கினர்பார், காடடா நாற் பத்து முக்கோணத்தில் கனமானஐம்பத்தோ ரக்ஷரத்தைவையே.

வையப்பா அதன்மேலே பிருவளையம்போடு வளமாக நாள் மூலைநாலிதழுப்போடு, கையப்பா நாலிதழ்க்கும் அக்ஷரத்தைக் கேளு நலமான வயிரவனும் வீரபத்திரன், கையப்பா காளி யுடன் இருளனு கணக்காக அவரைவைக்குக் ஸ்தானங் கேளு மெய்யப்பா மேற்கிலேவீரபத்திரன் மேலான வையிரவனைக்கிழக்கே வையே. 664

வையடா தெற்கினிலே காளிவைநீ, வளமான இருளனைத் தான் வடக்கேவைப்பாய், கையடா நாலிதழ்க்குநால் தேவதைகட் சொன்னேன் கனமான நவகோணஞ் சூலம்போடு, கையடாசூலத்தி லொன்ப திதழ்ப்போடு, நலமான நவக்கிரகம் இதழிற்போடு, மெய்யடா ஐங்கோணம் ஐந்து சூலம்போடு மென் மேலுஞ் சூலத் தில் ரீங்காரம்நாட்டே. 265

நாட்டவே முக்கோண மூன்றிதழும்போடு நலமான வஸ்து வடா ஊமை ஊமை, காட்டவே ஊமைதனைப் போலு முண்டோ கனமான ஊமைபடர் வாலையப்பா, வாட்டவே வேண்டாங் காண் ஊமைசத்தி வளமான சத்தியடா நாதசத்தி, மாட்டவே வகைதோன்ற சொன்னேன்கேளு மநத்தானபூசைசெய்து யோகஞ் செய்யே. 266

செய்யடா என்மகனே சொல்லக்கேளு ஜெயமான சக்கரத்தை முன்னே வைத்து, ஐயடா அபிஷேகம் அஞ்சுஞ்செய்து அப்பனே புட்பமொடு சந்தனஞ்சாத்து, கையடா கஸ்தூரி புனுகு சூரம் கனமான பரிமளஞ் சவ்வாதுசாத்து, மெய்யடா சக்கரத்தின்மேலே யப்பா மேலான சல்லிமரப்பாவை வையே. 267

வைத்தடா செம்பட்டு அதைதான்சாத்து வேதாந்த புட்ப மொடு பரிமளஞ்சாத்து, ஐந்தடா மதனவல்லிக் கொலுவில் சாத்து அப்பனே * சமிதைகொண்டு ஓமஞ்செய்து, மெய்த்தடா மதிய மூர்தந் தனைவைத்து மென்மேலும் பால்பழங்க ளுபசாரஞ் செய்து, நைத்தடா தூபமொடு தீபங்காட்டி நாதாந்த சத்தி யென்று தோத்திரஞ்செய்யே. 268

செய்யடா என்மகனே சொல்லக்கேளு ஜெயமான மூலமடா மூலாதாரம், ஐயடா ஆதாரமேலாதாரம் அப்பனே மேல்நோக் கிக்கீழ் நோக்கும்வீடு, வெய்யடா வேதாந்தவீடுதானப்பா வேதாந்த வாசியது ஒடுக்கும்வீடு, கையடா மூலத்தில் நிற்கும்வீடு கனவீட் டில் வாசியது எழும்பும்பாரே. 269

பாரடா விந்தாலும் வியாதியாலும் பகாரிய அன்னமில்லாச் சூட்டினாலும், நாரடா கர்மத்தா லனேகம்போகும் நாதாந்த வதை யாலும் வினையினாலும், வாரடா இவைகளினால் ஸ்வாசம் போச்சு வளமான வீட்டிலடக்கும் விபரங்கேளு, காரடா இம்மென்றுஇழுத் துக்கும்பி கனமாக அடக்கயிலே மூலம்புக்குப்பாரே. 270

பாரப்பா விடுகையிலே உம்மென்று தியானம் பரிவாக எடுக் கையிலே முன்விதமாய்க்கும்பி, ஆரப்பா அறிவார்கள் வாசிச்சூக்ஷம் அப்பனே திறந்துவிட்டேன் முன்னேதாண்டா, சேரப்பா ஐங் காயம் முப்பூங்கூட்டி செல்லெடையாயடக்கவே அமுர்தமூறும் நாரப்பா பூரணதி யமுர்தங்கொண்டு நலமாபூரணத்தைக் கும் பித்துப்பாரே. 271

பாரெனவே பூரணதியதனிலப்பா பண்பான வாசியது மடிந் துப்போச்சு, காரெனவே கருவிகள்தான் தொண்ணூற்றாறுங் கனமாக வுருகியது கற்போலாச்சு, ஆரெனவே யிந்த விதங் கும்பித்தாற்கால் அப்பனே நாற்பதுநாள் பழக்கம்பண்ணு, வாரெ னவே வாலைமுன்னே குந்திக்கொண்டு வளமாக கால் கழுத்தில் சிக்கம்போடே. 272

---

* சமிதை-ஓமவிறகு.

சிக்கமிட்டு யோகதண்டு இருபுரமும்வைத்து செயலாக மான் தோலில் குந்துக்குந்து, வக்கமிட்டு ஒருநிலைபாய் ஒரு தவமாய் நின்றால் வகாரமுள்ளப் பதிதோன்றும் பாருபாரு, பக்கமிட்டு நாற்பதுநாள் ஒருமனதாய்க் குந்து, பகருமிரு நினைவதனை வைக்க வேண்டாம், தர்க்கமிட்டு உக்கிர வைராக்கியமகொண்டு தருமந்தான் ஒருமனதாய் நில்லுநில்லே. 273

நிற்கையிலே ஒருவேளை போசனங்கொள் நேரான போசனத்தைதள்ள வேண்டாம், வற்கையிலே கள்ளுடன் சாராயமாகா வளமான கஞ்சாவு மாகாதுபாரு, கற்கையிலே அமுர்தமது கொள்ளும்போது நனமான புளியுடனே புகையுமாகா மற்கையிலே வாசியுட அமுர்தங்கொள்ளு மகத்தான போதமடா வாசிதானே. 274

போதமது கொள்ளயிலே காற்றுமாகா புகழான வாசிகொண்டால் சித்தன் சித்தன், ஆதமது இல்லாத சடலத்தைந்தான் அப்பனே நிறுத்தமது அருமைமெத்த, வாதமது செய்தாற்காலென்னக்கீர்த்தி வளமான சடலத்தை நிறுத்தவேணும், காதமது திரிந்தாலு மென்னக்கீர்த்தி. கனமாக இல்லறத்தில் யோகஞ் செய்யே. 275

செய்யயிலே யொருவருஷஞ் செய்தானாகில் ஜெபமான பிரமனவன் இவர்க்கீடுண்டோ, வையயிலே ஐம்பூதவாசியாலே வளமாக சிவசத்தி வாசியாலே, கையயிலே ஊமையனும் வாசியாலே கனமான கருவிகள்தான் தோணுமாற்றும், மையயிலே கூடுமது வாசியாலே நலமான வாசியினாலெல்லாமாச்சே. 276

கருங்கையான் கற்பம்.

ஆச்சென்ற வாசியையே மறக்கவேண்டாம் அப்பனே கருங்கையான் கற்பங்கேளு, வாச்சென்ற பிண்டத்தி லெருவைக்கொட்டி வளமான கருங்கையான் அதன்மேல் வைத்து, போச்சென்ற சுத்த ஜலம் வாருவாரு, புகழ்பெரிய செடியாகிப் பச்சைக் கொள்ளும் காச்சென்ற கருங்கையான நாற்பதுநாட் சென்றால் கனமான கருங்கையான் விருக்ஷம்போலாமே. 277

ஆமென்ற கருங்கையான் நாற்பது நாட்கொள்ளு அப்பனே சட்டையது ஏழுந்தள்ளும், காமென்ற அமுர்தமது கனிந்துபாயும் கனமான கருங்கையான் மகத்வமெத்த, வாமென்ற வழலைகையான் இதுதானப்பா வளமான கையானைமண்டலமே கொள்ளு, போமென்ற கையானில் வாசிசித்தி புகழ்பெரிய ஞானமொடு யோகஞ் சித்தே. 278

மேனிக்கற்பம்

சித்தாக இருப்பதற்கின்னங்கேளு செயலான மேனிக்கற்பஞ் சொல்வேனப்பா, மத்தாக மேனிசெடிக் கொண்டுவந்து மகத்தான தலைப்பிண்ட எருவும்போட்டு, நத்தாக செடிபுதைத்துச் சொல்லக் கேளு நாதாந்த சிறுநீரை வார்த்துக்கொண்டு, மெத்தாக அறுபது நாட்சென்று தானால் மென்மேலும் விருக்ஷமதாய்ச் செடியாய்ப் போமே. 279

போகுமடா கைபாகமாகவைநீ பொருளான நீரைத்தான் பதன மாய்வாரு, வாகுமடா விருக்ஷத்தைத் தொண்ணூறு நாட்கொள்ளு வளமான *யாக்கையடா அழிவோ இல்லை, நாகுமடா முப்பூச் சுண்ணம் போட்டுக் கொள்ளு நாதாந்த கற்பமடா மேனிக்கற்பம், ஆகுமடா யாக்கையது வலுத்துப் போச்சு அப்பனே யாக்கையது எழு போலாச்சே. 280

ஆச்சென்ற வாசிக்கு உயிர்தானாகும் அப்பனே வாசியடா மத வானைத்தான், காச்சென்ற கருவிகளோ டொக்கச்சேர்ந்து கருவாக நிற்குமடா வாசிவீடு, வாச்சென்ற வழிதுறையும் நன்றாய்ச்சொன் னேன் வளமான கைபாகம் நன்றாய்ச் சொன்னேன், காச்சென்ற நந்தீசர் அருள்தன்னாலே நன்றாக சொல்லிவிட்டேன் நாதந்தானே.

ஐங்கோல ஜெயநீர்

நாதந்தான் ஐங்கோலஜெயநீர்கேளு நலமான பிண்டமடா ஐங் கோலபிண்டம், வாதந்தான் இதற்கீடோ இதுவிட்டாற் கால்வள மான வாதமெல்லாம் அழிந்துப்போச்சு, காதந்தானில்லையடா ஐங் கோலபிண்டம் கனமானபிண்டமடா கொண்டுவந்து, மாதந்தானேந் தானமாதமப்பா மகத்தான அண்டத்தையுடைத்துக் கொள்ளே.

---

*யாக்கை-உடல்.

கொள்ளப்பா வீரமுடன் பூரங்கரியுப்புக் குணமான வெடியுப்பு அண்டச்சுண்ணம், அள்ளப்பா இவையெல்லாம் பொடித்துக் கொண்டு அப்பனே யண்டத்தில் போட்டுக்கொண்டு, விள்ளப்பா மேல் நோக்கிவானம் பார்த்து விசையாக பனிப்பெய்யுங்காலந்தன்னில், மள்ளப்பா மதிதனிலே வைத்திட்டாற் கால்மகத்தான ஜலமாகி நீராயப்போமே. 283

போமப்பா நீர்தன்னைப் பதனம்பண்ணு புகழான நீரப்பா ஐங்கோலநீர்தான், வாமப்பா வாதிகளே நாமங்கேளு வளமான ஐந்தருவாம் ஜெயநீரென்பார், காமப்பா கும்பிடென்றே யேரிநீரு கனமான ஏரியுடசத்திநீரு, நாமப்பா கோரையுடஜெயநீரென்பார் நலமான ஐந்துவகையானநீரே. 284

நீரென்ற வழலைநீர் சவர்க்காரநீர்தான் நிசமான சங்கினியின் நாதநீரு, வாரென்ற ஐங்கோலசங்கினிதானப்பா வளமான எட்டாவசித்தினிதான்பாரு, காரென்ற ஒன்பதுடன் பத்துந்தாண்டா கனமான பதுமினிதானென்றபேரு, ஆரென்ற மூன்றுடனே நாலுந்தாண்டா அஸ்தினியென்றுகாம் அருளினுமே.* 285

அருளினும் சித்தினியும் அஸ்தினியும்பாரு அப்பனே சங்கினியும் பத்மினியுந் தாண்டா, வருளினும் சகலவித்தைப் பிரித்துச் சொன்னேன் வளமான சித்தர்கள் தான்மறைத்துச் சொன்னார், நருளினும் ஈசனவர்தர்மமாவென்றார் நலமாக அடிவணங்கி தெண்டன் செய்தேன், கருளினார் கருவிகள்தான் காதிற் சொன்னார் கனமாக யான்கண்டுத் திறந்திட்டேனே. 286

திறந்திட்டேனென்ற தொருவிவாங்கேளு திறமான சித்தர்களோடொக்கச் சேர்ந்தேன், வறந்திட்டேனென்றவர்தான் குலமென்னவென்றார் வளமான என்குலந்தான் சினையனென்றேன், அறந்திட்டேனென்றவர்தான் தர்க்கஞ்செய்தார் அப்பனே தத்துவத்திற் கிழித்திட்டேன்பார், நறந்திட்டேனென்றதோர் ஜாதியொன்று நலமான சாதியடா ஆண்பெண் ரண்டே. 287

செண்டான சாதியடாபலசாதியாச்சு *ரேசக*பூரகமுமதனாலொன்றாய்ப்போச்சு; வண்டான என்மனதை சோதித்தார்கள் வளமான என்னுள்ளங்கண்டாரையா, அண்டான அவர்மனந்தான் பூரித்தார்கள் அப்பனே தன்வந்திரி பகவானென்றார், கண்டான வஜிஷ்டருட ஆசிர்மம் போனேன் கனமான வஜிஷ்டர் தர்க்கஞ் செய்தாரே. 288

தர்க்கமிட்ட அவரோடே யுத்தாரஞ் சொன்னேன் தனதாக அவரெனக்கா சீர்வதித்தார், வர்க்கமிட்ட அறுபத்துநால்பேரண்டை வகையாக அவரவர்தன் வரங்கள் பெற்றேன், மர்க்கமிட்ட மௌனத்தில் சகஸ்திரமிருந்தேன் மகத்தான மௌனசிவயோகம் பெற்றேன், நர்க்கமிட்ட நந்தீசர்பாதஞ் சேர்ந்தேன் நலமா நந்தீசரெனைவளர்த்தார்பாரே. 289

நூல்கோர்வை

பாரப்பா என்னுடைய கோர்வை சாஸ்திரம் பண்பாக சொல்லுகிறேன் கேளுகேளு, ஆரப்பா அறிவார்கள் கலைக்கியானமகிமை அப்பனே கலைக்கியானந்தண்டகமும்பாரு, நேரப்பா இருநூறும் பாருபாரு நிக்ஷெய சூஸ்திர மெழுபத்தொன்றும்பாரு, காரப்பா என்னுடைய முப்பூபாரு கனமான ஜெயநீர்தான் ஐம்பதுவுங்காணே

காணப்பா இந்நூலின் மகிமைக்காணு நாணுட்டா லிந்நூலின் மகிமைமெத்த, வாணப்பா கசடர்களைவாதிமாடே வளமான இந்நூலைச்சோதித்தேரு, ஆணப்பா இந்நூலார் கொடுக்கப்போறார் அப்பனே சாஸ்திரத்தைத் தேடிவாங்கு, மாணப்பா மடையருக்கு அகப்படாது மகத்தான சிவயோகி பார்ப்பார்பாரே. 291

பார்க்கவே சகலமுந்தான் தோன்றும்பாரு பண்பான சிவயோகிக்கிந் நூல்காணும், ஆர்க்கவே சமாதிக்குள் கற்பங்கொண்டு அப்பனே யோகநேஷ்டை யஷ்டாங்கஞ்செய்து, நார்க்கவே கெவுனத்திறோட்டம்பார்த்து நலமானவாலைப் பெண்ணஷ்டாங்கஞ்செய்து, கார்க்கவே கபாலத்தில் மதியமூர்தம் வாங்கு கனமான யோகருதை யதசிற் கொள்ளே. 291

---

*ரேசகம்-ஸ்வாசம்வெளிவிடுதல், * பூரகம்-மூச்சு-உட்புகுதல்,

கொள்ளப்பா சமாதிக்குள் தலைவனாகிக் கொண்டு விடுசாரணை மேலேறிக்கொண்டு, அள்ளப்பா சித்தரண்டை வந்துசேரு அப்பனே யோகமூர்தம் பூட்டுவார்கள், வள்ளப்பா லோகத்தில் நின்றாயானால் வாரிதிபோல் பிரமனவன் கொண்டு போவான், கள்ளப்பா கசடரவர் நூல் பார்த்தாலும் கரையேற மாட்டார்கள் கண்டிலாரே. 293

வைரவர்தியானம்

காணடா நூலிருக்கு மிடமறிந்து கைப்பொருளை யீந்துநீ நூலைவாங்கு, வாணடா வைரவர்தியானங்கேளு வளமான வங்கென் றும்-சங்கென்றுஞ்சொல்லு, காணடா ஸ்ரீங்கென்றும் ஷங்ஷங்கென் றும் நலமான வயிரவாசகாவென்று, ஆணடா லக்ஷமுருநாற்பது நாள் செய்து அப்பனே தூபமுடன் தீபங்காட்டே. 294

காட்டவே ரேசகபூரகமுஞ் செய்து கனமான வில்வத்தாலர்ச்ச னைதான்செய்து, வாட்டவே பால்பழங்கள் பலகாரங்கள் வளமான பாயாசம் செய்தேன்வைத்து, நாட்டவே நமஸ்கார வுபசாரஞ்செய்து நலமாக நாற்பதுநாள் செய்யும்போது, ஆட்டவே அதிசிய வசியமா வான் ஆனதொரு வடுகனவன் கைவசமாயப்போச்சே. 295

சுப்பிரமணியர் தியானம்

போச்சப்பா சுப்பிரமணியர் தியானங்கேளு புகழான அரீங் கென்றும் நரீங்கென்றுஞ்சொல்லு, காச்சப்பா கங்கென்றுஞ் சங் கென்றுஞ்சொல் கனமான மரீங்கென்றும் ரீங்ரீங்கென்றும், வாச் சப்பா வாலசுப்பிரமணிய தேவாயாவென்று வளமாக நாற்பதுநாள் லக்ஷமோது, நாச்சப்பா வடைதோசை யப்பமோடு நலமான தேனு டனே பாயாசம்வையே. 296

வையப்பா புட்பமொடு புனுகுசுகந்தம் வளமான கஸ்தூரி புனு கும்வைநீ, கையப்பா மண்டலந்தான் உபசாரஞ் செய்நீ கனமான கந்தனவன் வசியமாவான், மெய்யப்பா சுப்பிரமணிய தியானம்வே ணும் மேலான வடுகனுடதியானம் வேணும், ஐயப்பா இவரைவிட் டால் வாதமேது அப்பனே யோகமொடு ஞானமேதே. 297

ஏதப்பா வயித்தியந்தான் வடுகனாலே யென்மகனே யிவரை விட்டால் பொய்யாம்பாரு, வாதப்பா மடையரவர் கூடிக்கொண்டு வளமான தர்க்கங்கள் வீணாய்ச்செய்வார், ஆதப்பா அடையாளமில் லாகற்பம் அப்பனே கஞ்சாவைக் கற்பங் கொள்வார், போதப்பா பித்தவெறி மேலேகொண்டு புலம்புவார் மான்பரவர்மட்டிவீணர்.

வீணப்பா வீணாகப்புலம் புவார்கள் வீணரப்பா பொருளறியா மட்டிமாடு, ஆணப்பா ஆணவத்தாலழிந்தேபோவார் அப்பனே அதன்சூடுசிரசிலேறி, மாணப்பா மாண்டிடுவார் கபால சூட்டால் மகத்தான பித்தராசன் கோபமாவான், காணப்பா இதுதள்ளிமதிய மூர்தங் கொண்டால் கனமான யாக்கையது அழியொண்ணாதே.

ஒண்ணாது பலபுத்திவிட்டுத் தள்ளு வேதாந்த புத்தியாய் நின் றேருக்கும், கண்ணாது கல்வியதுமிகவே தோன்றும் கனமான வாசி யது க்ஷணத்திற்சிக்கும், அண்ணாது அறிவாலைக்குணமூன்றைக்கட்டி அப்பனே யாக்கையதிலகத்தியனைக்கண்டால், வண்ணாது அஷ்ட சௌபாக்கிய மீய்வான் வளமான என்பேரன் அகத்தைக்கண்டானே

கண்டதனாலகத்தியனென்ற பேருமாச்சு கனமான அகத்திய னடாகண்டான்பாரு, விண்டதனால் யான்விண்டேன யார்விண்டார் கள் விலையில்லா இரக்கத்தால் விண்டேன்பாரு, அண்டதனால் மூந் நூறுங்கண்டபேர்க்கு அரனெனவே பெயருண்டாம் அருளினேன் பார், மண்டதனால் இந்நூலைக்கண்டபேர்க்கு மகத்தான சிவயோகி யென்னலாமே. 301

ஆமப்பா இந்நூலைப் பதனம்பண்ணு அப்பனே நல்லோர்கள் பதனஞ்செய்வார், வாமப்பா இந்நூலையெடுத்துக் கொண்டு வளமாக நீயெடுத்துப் பூசைப்பண்ணு, காமப்பா கல்வியறி வெல்லாந்தோன் றுங் கனமான இந்நூலைக் கைவிடாதே, நாமப்பா மூந்நூறும்பாரு பாரு நலமான கருக்கிடை நிகண்டிது தான் முற்றே. 302

தன்வந்திரி கருக்கிடை நிகண்டு 300

முற்றிற்று முற்றும்.

புத்தக விளம்பரம்.

	ரு.	அ.
விநாயகபுராணவசனம் கிலேஸ் காலிகோ பைண்டு	4	0
பட்டிணத்தார் பாடல் உரை	1	8

வைத்திய புத்தகங்கள்.

	ரு.	அ.
மணிமந்திர வைத்திய சேகரம்	1	0
புலஸ்திய மகாரிஷி வாதசூத்திரம்-300	0	12
உரோமரிஷி சூத்திரம்-100	0	4
அகஸ்தியமுனிவர் பூரண சூத்திரம் 216-பாடல்	0	8
பாலவாகடத்திரட்டு வைத்தியம் 1200 பாடல்	1	0
ஊர்வசி வைத்ய சிட்கா	0	12
,, இரண்டாம் பாகம்	0	12
தன்வந்திரி கருக்கிடை நிகண்டு-300	0	12
ஆயுள்வேத சுருக்கம்	0	12
திருமூல நாயனார் வைத்திய காவியம் 1000 பாடல்	1	0
வைத்திய குறள் பழமொழி விளக்கம்-108	0	8
புலஸ்தியர் விளக்கிய ஞானகற்பம்	0	8

சோதிட புத்தகங்கள்.

	ரு.	அ.
நவக்கிரக சிந்தாமணி என்னும் சாதக சூடாமணி மூலமும்-உரையும்	0	12
களவுகாணும் சாஸ்திரம்	0	4
வீமகவி பாட்டு உரை	1	0
சுகர் நாடி சோதிடம்	1	0
சோதிமாமுனிவர் சோதிட கேரளம்	0	12
சாதகலங்காரம் மூலமும் விரிவுரையுடன்	2	0
சோதிட முகூர்த்த விதானம்	0	12
கணித முருகசேகரம்	1	0
ஹோரா சாஸ்திரம்	1	0
கௌசிக சிந்தாமணி 1-பாகம்	0	14
,, 2-பாகம்	1	0
,, 3-பாகம்	1	0
சோதிட நூலாதாரம்	0	4
சர்வ கனவின் பலன்	0	4

இட்டா-பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

189, தங்கசாலைத் தெரு, மதராஸ.